விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

Registered as a Newspaper in Sri Lanka
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 13 செவ்வாய்க்கிழமை (26.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வித சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



அம்பாறையில் நடைபெற்று வரும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## மத்திய அரசுக்கு மற்றொரு தலையிடி


### பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வலியுறுத்தி ஜெயா பிரதமருக்கு கடிதம்



(சென்னை)

கொழும்பில் நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் எனக் கோரி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியிருக்கிறார்.

(20ஆம் பக்கம் பார்க்க)



## வட மாகாண சபை இன்மையால் தேர்தலை நடத்த முடியாது !

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வட மாகாண சபை தேர்தலை நடத்தமுடியாது என தேர்தல்திணைக்களம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவினால்வட மாகாண சபை இது வரை அமைக்கப்படாமையினாலேயே தேர்தல் நடத்த முடியாது என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரசாங்கம் வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது என தீர்மானித் (20ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதான இருவருக்கு விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட இருவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

1993மற்றும்2007 ஆம்ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகளிடத்தில் இருந்து ஆயுத பயிற்சி மற்றும் தற்கொலை குண்டு தாக்குதலில் ஈடுபட்டதாக கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு பகுதியை சேர்ந்த இருவரும் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டது.

இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் உரிமையை பாதுகாக்க மகிந்த அரசாங்கம் தவறிவிட்டது

### முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு மகிந்த அரசின் செயற்பாடுகள் தான் காரணம் என்று முன்னிலை சோசலிசக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன் தமிழர்களின் உரிமை



களை பாதுகாப்பதற்கு மகிந்த அரசு இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை என்றும் அந்தக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில்நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே முன்னிலை சோசலிசக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜெயகொட மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, யுத்தம் முடிபடைந்து மூன்றரை வருடங்கள் கடந்துள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் கடையடைப்பு

(கொழும்பு)

இலங்கையில்முஸ்லிம்களுக்கு எதிராக நடந்துவரும் விடயங்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் கடையடைப்பு ஹர்த்தால் நடந்தது.

இதன் காரணமாக முஸ்லிம் பிரதேசங்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

பொது பல சேனா போன்ற பௌத்த அமைப்புக்களினால் அண்மைக்காலமாக முஸ்லிம்களின் மதச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் முஸ்லிம்களின் மத வழிபாட்டுத் தலங்கள் மீதும் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா தீர்மானத்துக்கு இந்தியா வழங்கியது பேருதவி

### கடைசி நேரக் காய்நகர்த்தல் என்கிறார் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதுள்ள நிலையிலும், இது விடயத்தில் இலங்கை மீது அமெரிக்காவின் அழுத்தங்களையும், தலையீடுகளையும் தடுக்கும் வகையில், இறுதிக்கட்டத்தில் காய்நகர்த்தி இலங்கைக்கு இந்தியா பேராதரவு வழங்கியது என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தைநாம்ஏற்றுக்கொள்ளமுடியாது (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விஜயம் நிராகரிப்பு

(கொழும்பு)

மனிதவுரிமை ஆணைக்குழுவின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் வரை இலங்கைக்கு விஜயம் செய்வதை மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை நிராகரித்துள்ளார்.

உடனடியாக இலங்கைக்கு சென்று நிலைமைகளை கண்காணிக்குமாறு இந்தியா, நவநீதம் பிள்ளையிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை அமெரிக்காவின் யோசனை நிறைவேற்றப்பட்ட பின்னர், ஜெனிவாவிற்கான அமெரிக்க தூதுவர் ஐலின் டொனஹோர் ஊடகங்களிடம் உரையாற்றினார்.

போர்குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை தொடர்பில் இலங்கை தனது பொறுப்பில் இருந்து மீள இடமளிக்க (20ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றுலா பயணிகள் சென்ற பஸ் தீக்கிரையானது!

(சென்னை)

பதினாறு இலங்கை சுற்றுலா பயணிகள் பயணம் செய்த பஸ் எரிந்து சாம்பலாகிய போதும் அவர்கள் அதிர்ஷ்டவசமாக தப்பிக் கொண்டனர்.

ஒரேயொரு சுற்றுலா பயணிக்கு மட்டும் தலையில் எரி காயம் ஏற்பட்டுள்ளது. இந்த சுற்றுலா பயணிகள் மதியவேளை உலகின் அதி உயரமான கெஸாரிய புத்த ஸ்தூபியில் ஏறிக்கொண்டிருந்தபோது வெளியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் திடீரென தீப்பிடித்துக் கொண்டுள்ளது.

சுற்றுல்லா பயணிகளின் சூட்கேசுகள், கடவுச்சீட்டு உட்பட சகல தனிப்பட்ட உடைமைகளும் கருகி போயுள்ளன. தீப்பிடித்ததற்கான காரணம் இன்னும் தெரியவில்லை. எனினும் அண்ணளவாக ஒரு மில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப் (20ஆம் பக்கம் பார்க்க)

## அல்லாவைத் தவிர எவரையும் முஸ்லிம்கள் வணக்க மாட்டார்கள்

### அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இஸ்லாம் மதத்தில் அடிப்படைவாதம் கிடையாது, நடு நிலையை கடைபிடிக்குமாறேகுர்-ஆன்போதிக்கின்றது. முஸ்லிம் மக்கள் ஒரு போதும் அடிப்படைவாதத்திற்குள் செல்ல மாட்டார்கள். பௌத்த மதத்திலும் நடு நிலை குறித்து கூறப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. [illegible]

கொழும்பில்நடைபெற்றஅனைத்து இனங்களுக்கான ஐக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இஸ்லாம் மற்றும் பௌத்த மதங்களில் அடிப்படைவாதங்கள் இல்லை. சில நபர்களின் தவறுகளை தவிர வேறு எதுவும் இல்லை. முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 67 மில்லியன் ரூபாய் செலவில் 10 ஆயிரம் சைக்கிள்கள் வழங்கப்பட்டன

## இந்திய துணைத் தூதரகம் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 67 மில்லியன் ரூபாய் செலவில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன என இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்து வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்ந்தோரின் நலன் கருதியும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் தேவைக்கேற்பவும் 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளை இந்திய மானிய உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகராலயம் கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அறிவித்திருந்தது.

மீள்குடியமர்ந்தவர்களின் போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றி வாழ்வாதாரத்தினை மீள் வலுவூட்டுவதன் நோக்கத்திற்காக இலங்கை அரசாங்கத்தினால் இனம் காணப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் இத் திட்டம் உருப்பெற்றது.

பாடசாலை செல்லும் சிறுவர்களைக் கொண்ட குடும்பம், வாழ்வாதாரத்திற்காக தொழில் செய்யும் குடும்பங்கள், உடல் ஊனமுற்று உளநிலை பாதிக்கப்பட்ட அங்கத்தவர்கள் கொண்ட குடும்பங்கள் மற்றும் பின் தங்கிய இடங்களில் வசிக்கும் குடும்பங்கள் என பயனாளிகள் தெரிவு செய்யப் பட்டு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவியுடன் துவிச்சக்கர வண்டிகள் விநியோகிக்கப்பட்டன.

10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 2, 500 துவிச்சக்கரவண்டிகளும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2 ஆயிரத்திற்கு 500 துவிச்சக்கர வண்டிகளும், மன்னார் மாவட்டத்திற்கு ஆயிரத்து 750 துவிச்சக்கர வண்டிகளும், வவுனியா மாவட்டத்திற்கு ஆயிரத்து750 வண்டிகளும் யாழ்.மாவட்டத்திற்கு ஆயிரத்து 500 துவிச்சக்கர வண்டிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ் விநியோகப் பணிகள் யாவும் இம் மாதத்துடன் நிறைவடைந்துள்ளது என யாழ். இந்திய துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (எ-4)

# கிணற்றுக்குள் தவறி விழுந்து ஊடகவியலாளர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது தவறி வீழ்ந்த ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் தெல்லிப்பழை பன்னாலையிலுள்ள அவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து செயற்படும் இணையத்தள மொன்றின் அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றிவரும் புவனேந்திரராஜா மயூரதன் வயது(27) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் பன்னாலையில் உள்ள அவரது வீட்டுக் கிணற்றில் தவறிவீழ்ந்த ஊடகவியலாளரின் உடலம் நேற்று காலை 11.00 மணிளவில் பொலிஸாரின் உதவியுடன் மல்லாகம் நீதிவான் கஜனி திபாலன் முன்னிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் உடலம் நேற்று பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என உறவினர்கள் தெரிவித்தனர். (எ-6-4)

# எரிபொருள் எடுத்து வரத் தாமதம்; ஒன்றரை மணி நேரம் திண்டாட்டம்

## மத்தல விமான நிலையத்தில் சம்பவம்

புதிதாக திறக்கப்பட்ட மத்தல ராஜபக்ஷ விமான நிலையத்திலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமொன்று சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள தாமதமாக புறப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

எரிபொருள் ஏற்றிவரும் பவுஸர் வண்டி தாமதமாகியதை அடுத்தே மேற்படி விமானம் தாமதமாகப் புறப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சவூதி அரேபியாவின் றியாத் நகருக்கு புறப்படவிருந்த யூ.எல் 273 ரக விமானம், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு பின்னர் எரிபொருள் நிரப்புவதற்காக மத்தல விமான நிலையத்திற்கு புறப்பட்டது.

மத்தல விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பிக்கொண்டு மீண்டும் அவ் விமானம் புறப்படுவதற்குஅரை மணித்தியாலங்கள் தாமதமாகும் என்று அவ் விமானத்தின் கப்டன் தெரிவித்திருந்தபோதும் அவ் விமானம் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தாமதமாகவே புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் நிலை யத்துக்கு எரிபொருள் கொண்டு வர தாமத மாகியதாலேயே விமானம் தாமதமாகப் புறப்பட்டதாகதகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்தல விமான நிலையத்தில்விமானங்களுக்கான எரிபொருள்களை சேமித்து வைப்பதற்கான வசதியில்லை. அம்பாந்தோட்டை துறை முகத்திலுள்ள தாங்கிகளில் இருந்து தான் விமான நிலையத்துக்கு எண்ணெய் கொண்டு வரப்படுகின்றது. இதனாலேயே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக மேற்படி தகவல்கள் குறிப்பிட்டன.

ஐக்கியதேசியகட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றும் போது எரிபொருள் சேமிக்கும் வசதியில்லாத ஒரே ஒரு விமான நிலையம் மத்தல விமான நிலையம்தான் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த சுற்றாடல் துறை அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த, பவுஸர்களில் எண்ணெய் கொண்டு வருவதில் ஒரு பிரச்சினையும் ஏற்படாது என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# அதிகாலை பஸ் இன்மையால் பயணிகள் பெரும் சிரமம்!

## காரைநகரில் அவலம்

(காரைநகர்)

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிக்கும் இ.போ.ச பேருந்துகள் அதிகாலை 5.30 மணிக்கு பயணிக்காமையால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிக்கும் இ.போ.ச பேருந்துகள் காலை 6.30 மணிக்குப் பின்னரே பயணிப்பதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காலை 6.30 மணிக்கு பின்னர் இ.போ.ச பேருந்துகள் பயணிப்பதனால் அதிகாலை வைத்தியசாலை மற்றும் தூர இடங்களில் உள்ள அலுவலகங்களுக்கு செல்வோர் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு தனியார் பேருந்துகள் பயணித் தாலும் கூட அதிக பயணிகள் பயணிக்க முடியாத நிலை காணப் படுகின்றது.

பயணிகள் கூடுதலாக தனியார் பேருந்துகளில் பயணிப்பதால் பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-3)





**தொடர்ந்தும் உங்கள் சேவையில்**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடைவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.:-021 222 5
WESTERN UNION MONEY TRANSFER
(அ/2799)

தில்லையம்பதியாள் துணை

**சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம்**



இராகம் - கல்யாணி
ஆலரசு மரத்தின் அருள்மிகு பொந்தினூடோ
ஆனந்தக் கலசம் காட்டும் அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம் பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின் ஜோதியான கல்யாணி

இன்று (26.03.2013) செவ்வாய் மு.ப 9.00 மணிக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகம் விசேட பூசை நண்பகல் மகேஸ்வர பூசையும் அன்னதானமும் நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு விசேட பூஜை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று மாலை 7.00 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி, தெய்வயானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் பெரிய தெரு வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

**சங்காபிஷேக உபயம்:-**
**அரச ஊழியர்களும்,**
**ஒய்வூதியம் பெறுவோரும்- கோண்டாவில்**

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

தில்லையம்பதி பரிபாலன சபை
(2250)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0776333133, 0212230774
(2249)

**தேவை**

வைத்திய நிலையத்திற்கு பின்வரும் ஆட்கள் தேவை.
- வைத்தியர் (MBBS, RMO, RMP,MD)
- அனுபவமுள்ள தாதிமார்கள் (பெண்கள்)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:
0777 750 391
(2245)

**தவறிவிட்டது**

புளியங்கண்டு பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரியினையுடைய செல்வராசா கலாமோகன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (922674612V) மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் என்பன ஆனைக்கோட்டைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(அ-2804) தொடர்பு: 0770724035

**வீடு விற்பனைக்கு**

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் 4 அறைகளைக் கொண்ட கல்வீடு, கிணறு, மின்சாரம், சுற்றுமதில் வசதியுடைய 3 பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0776409432, 0771244642
(2246)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரக்கமும் ஏமாற்றமும்

"இரக்கப்படு! ஆனால், ஏமாந்து போய்விடாதே!" என்று புத்திமதி கூறுவதுண்டு.

நம்மில் பலர் அதிகம் இரக்கம் காட்டி, அதனால் ஏமாந்து போகிறோம். நாம் மட்டுமல்ல... அந்தக் காலத்திலேயும் கூட இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

இது தொடர்பாக அதிகமான கதைகளை ஆன்மீகப் பேச்சாளர்கள் கூறி வருகிறார்கள்.

இருந்தாலும் அதிலே ஒரு கதையை இப்போது உங்களுக்கு கூறலாம் என்றொரு ஆசை.

சரி, இப்போது கதைக்கு வருவோம்...

ஒரு காட்டிலே முனிவர் இருந்தார். முன்பெல்லாம் முனிவர்கள் காட்டிலேயே வசித்து வருவது வழமையாக இருந்தது. அதனால் இந்த முனிவர் காட்டிலே ஒரு ஆச்சிரமம் கட்டி அங்கே உட்கார்ந்திருந்தார். இவரிடம் இரக்கம் நிறைந்த சுபாவம் இருந்தது.

அந்தக் காட்டிலே அவருக்குத் துணையாக ஒரு நாய் இருந்தது. அந்த நாய் எப்போதுமே அவரை சுற்றி சுற்றி வந்து கொண்டேயிருக்கும்.

ஒருநாள் அந்த நாய் ஆச்சிரமத்தினுள் ஒரு மூலையிலே அமர்ந்து அழுது கொண்டிருந்தது.

இதைப் பார்த்த முனிவருக்கு மனம் இளகிப்போய் விட்டது.

அந்த நாயை அழைத்தார். அப்போது அது அருகில் வந்து நின்றது. "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு இக்காட்டிலே வாழ்வதற்கு பயமாக இருக்கிறது" என்றது.

"நான் இருக்கும் போது உனக்கென்ன பயம்?" என்றார்.

"நீங்கள் எப்போதும் என் அருகில் இருப்பதில்லை... சில சமயம் காட்டிலே இங்கேயும் அங்கேயுமாகத் தனியாக உலா வந்து கொண்டிருப்பேன். அந் நேரங்களில் நிறைய "நரி"கள் உலா வரும். அவைகள் என் மேலே பாய்ந்து கடித்து விடுமோ எனப் பயமாக இருக்கிறது" என்று கூறியது.

"கவலைப்படாதே! என்னிடம் மந்திர சக்தி இருக்கிறது. அதைப் பயன்படுத்தி உன்னையே நரியாக மாற்றி விடுகிறேன்" என்றார்.

அதே மாதிரி ஒரு மந்திரத்தைக் கூறி, அந்த நாயை நரியாக மாற்றினார்.

"இனிமேல் கவலைப்படாதே! எதிர்வரும் காலங்களில் மற்றைய நரிகள் கூட உன்னைப் பார்த்துப் பயப்படும்" என்றார்.

இப்படியாக நாட்கள் நகர்ந்தன.

மறுப்படியும் நரி உருவத்திற்கு மாறிய உள்ள நாய் அழுதது.

மீண்டும் அதனை அழைத்து "ஏன் அழுகிறாய்?" என்று முனிவர் கேட்டார்.

"இக் காட்டிலே நிறைய சிறுத்தைகள் இருக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது. எந் நேரத்திலே என்ன நடக்குமோ என்ற ஏக்கம் என்னை ஆட் கொண்டுள்ளது" என்று கூறியது.

"அப்படியா! சரி கவலைப்படாதே... உன்னையும் ஒரு சிறுத்தை போல் மாற்றி விடுகிறேன்" என்று கூறி மந்திரத்தைச் சொல்ல, அது சிறுத்தையாக உருவம் பெற்றது.

சிறிது நாட்கள் நகர சிறுத்தை உருவத்திலே இருந்த நாய் மறுபடியும் அழ ஆரம்பித்தது.

"என்ன காரணம்?" என்று விசாரித்தார்.

"இந்த காட்டிலே அதிகபடியான உருப்பெருத்த சிங்கங்கள் வசித்து வருகின்றன. அவற்றினால் எனக்கு உயிராபத்து வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது" எனக் கூறியது.

"சரி... உன்னையும் ஒரு பெரிய சிங்கமாக மாற்றி விடுகிறேன்" என்று மந்திரத்தைக்கூறி மாற்றினார்.

"நீ இப்போது இந்த காட்டுக்கே ராஜா..." என்றார்.

சிங்கமாக இருந்த நாய் யோசிக்க ஆரம்பித்தது. உடனே அந்த முனிவர் மேலே பாய்ந்து கடிக்க முயற்சித்தது.

"என்ன இது... என்னையே கடிக்க வருகிறாய்?" என்று கேட்டார் முனிவர்.

"நீ என்னை விட பெரிய சிங்கமாக வேறு யாரையாவது மாற்றி விடக்கூடாது. இருந்தாலும் உன்னுடைய மந்திரம் சக்தி மிக்கது. ஆதலால் உன்னை உயிரோடு விட்டு வைத்தால் ஆபத்து" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தது.

"ஆஹா! இரக்கம் காட்டி ஏமாந்து போய் விட்டோமே!" என்பது அப்போதுதான் முனிவருக்குப் புரிந்தது.

உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். ஒரு பலம் பொருந்திய மந்திரம் ஒன்றைக் கூறினார். உடனே அந்தச் சிங்கம் மறுபடியும் பழைய படியே நாயாகத் தோற்றம் பெற்றது. வேறு வழி தெரியாது அவர் காலையே மறுபடியும் சுத்தி வர ஆரம்பித்தது.

இரக்கம் காட்டலாம்; ஆனால், ஏமாந்து போய்விடக்கூடாது என்பதை விளக்கவே இக்கதை கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இந்திய வீட்டுத்திட்டத்தை பெறுவதில் காணிச் சிக்கல்

## விடயத்தை விளக்கி முல்லை அரச அதிபருக்கு மகஜர்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மேற்கு முதலாம் வட்டாரத்தில் கடந்த 23 வருடங்களாக வசித்து வந்த 57 குடும்பங்களில் 20 குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத் திட்டங்கள் எவையும் வழங்கப்படவில்லை என மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவர்கள் 23 வருடங்களாக வசித்து வந்த காணியை வேறொருவர் உரிமை கோருவதால் இந்திய வீட்டுத்திட்டம் கூட கிடைக்கவில்லை என அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த 20 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகத்திற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

1990 ஆம் ஆண்டு எமது நிலைமைகளை நேரில் வந்து பார்த்த புதுக்குடியிருப்பு பிரதேச பங்குதந்தை 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்களையும் முதலாம் வட்டாரம், முருகன் கோவில் அருகாமை, புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் பெரும் காடாக இருந்த இவ் இடத்தை வெட்டி இருக்குமாறு பணித்தார்.

பின் ஒவ்வொரு குடும்பங்களும் இரண்டு, மூன்று பரப்பு என்ற வீதம் துப்புரவு செய்து சுற்றுவேலி அமைத்து இருப்பதற்கான வீடுகளையும் அமைத்து வாழ்ந்து வருகின்ற போது 2005 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்த செ.தயானந்தனால் எமது பிரதேசத்திற்கான காணிக்கச்சேரி நடத்தப்பட்டது.

அதன் பயனாக அதற்கு சான் றாக ஓர் கைத்துண்டு எமக்கு தரப்பட்டது. (அதுவும் இறுதிப் போரில் தொலைந்து விட்டது) இந்நிலையில் மீண்டும் 2012.08.15 அன்று மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மேற்படி கிராமத்தில் எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றோம்.

இந்தக் கிராமத்தில் அதிகமானோர் கூலித்தொழில் செய்யும் குடும்பங்கள், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், விதவைகள் கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்கள், தாய், தந்தையரை இழந்த ஊனமுற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமே இப்பகுதியில் உள்ளோம்.

57 குடும்பங்கள் வாழ்ந்து வரும் இந்நிலையில் 37 குடும்பங்களுக்கு அரச காணி என்று கூறி அவர்கள் இருந்த காணிகளையே இந்திய வீட்டுத்திட்டத்திற்கு அனுமதித்துள்ளனர்.

அதே எல்லைக்குள் இருந்த 20 குடும்பங்களின் காணிகளையும் அரச காணி என கூறி உங்களிற்கு பிரச்சினை இல்லை எனவும் கூறிச் சென்றனர்.

எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி கூலித்தொழில் செய்துஅதன்மூலமான பணத்தினை கொண்டு வேலி அமைத்து இருப்பதற்குவீடுகள் இன்றி உருக்குலைந்து சிதை ந்து போன வீட்டின் மேல் தறப்பாள் போட்டு வசித்து வருகின்றோம். தற்போது காணி உரிமை கோருபவர்களும் அன்று தொட்டு இன்றுவரை இக்காணிக்கு 500 மீற்றர் தூரத்தில்தான் வசித்து வருகின்றனர். இவ்வளவு காலமும் இப்பகுதிக்குள் அடிக்கடி வந்து திரிபவர்கள் எங்களுடன் கதைக்கும் போதோ 2005 ஆம் ஆண்டு காணிக் கச்சேரி நடத்தும் போதோ புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வந்து காணிக்கு உரிமை கோரவில்லை.

தற்போது தன்னிடம் ஆவணங்கள் இருப்பதாகவும் அதைத் தாம் பிரதேச செயலரிடம் கொடுத்துள்ளதாகவும் கூறுகிறார்கள்.

இதனால்எமக்கு வந்துள்ள இந்திய அரசாங்கத்தின் வீட்டுத் திட்டத்தையும் இழந்து சொந்த மண் ணில் நிர்க்கதியாக நிற்கின்றோம்.

எம்மீது அதிக நலன் கொண்டு இரவு பகலாகப் பாடுபடும் அரசாங்க அதிபரிடம் இருந்து பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக நிற்கும் ஏழைகளின் வாழ்விற்கு ஒளியூட்ட ஒரு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என எதிர்பார்த்து காத் திருக்கின்றோம் என அதில் குறிப் பிடப் பட்டுள்ளது. (அ-2-267)

# இராசி பலன்

26.03.2013
(பங்குனி 13, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 4.42 மணிவரை
பூரம் முற்பகல் 10.46 மணிவரை
இராகுகாலம் 3.14-4.44 மணிவரை
சுபநேரம் 10.44-12.14 மணிவரை
பங்குனி உத்தரம், சித்தாமிர்தம்

**மேடம்** பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** பணிபுரியும் இடத்தில் மரியாதை கூடும், சுப செலவு செய்து மகிழ்வீர்கள், தொழில் நன்மையுண்டு, நண்பர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** பொல்லாதவர்களை உங்களை விட்டு விலகலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சகோதர ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், பயணங்களால் நன்மையுண்டு.

**கடகம்** வாக்கு மேன்மையுண்டு, தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம், மாதர் நட்புண்டு, குடும்ப கவலைகள் ஏற்படலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிங்கம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு உங்கள் தகுதியை உயர்த்தும், போசன நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி** காரிய அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், உறவினர்களுடன் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**துலாம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** அந்நியர் உதவியுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், ஆன்றோர் சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்** எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, குடும்பத்தில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், ஆரோக்கியம் குறைவான நாள்.

**கும்பம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, அபூர்வ சந்திப்புண்டு, உடல் நலம் சீராகும், போசன நன்மையுண்டு.

**மீனம்** சுவார்ஸ்யமான நாள், தொழில் விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, நோய்கள் குணமாகும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 140 |
| தக்காளி | 60 | 60 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 70 |
| கோவா | 40 | 40 | 60 | 120 |
| கரட் | 70 | 100 | 120 | 120 |
| பூசணி | 50 | 40 | 60 | 80 |
| புடோல் | 40 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 40 | 40-80 | 80-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 80 | 100 |
| பாகற்காய் | 150 | 120 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | -- | 120 |
| பயற்றங்காய் | 60 | 60 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 110 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 650 | 500 | 600 | 800 |
| போஞ்சி | 120 | 110 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 45 | 30-60 |
| இராசவள்ளி | 80 | 90 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 140 | 180 | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக பணம் பெற்றவர் தலைமறைவு


(கரணவாய்)

வெளிநாட்டில் வேலை வாய்ப்பை பெற்று தருவதாக கூறி பணம் பெற்ற இளைஞர் ஒருவர் தலைமறைவாகிய சம்பவம் ஒன்று கரணவாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, கரணவாய் மூத்த விநாயகர் வீதியில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் வெளிநாட்டில் வேலை வாய்ப்பை பெற்றுத் தருவதாக பொய் கூறி ஒருவரிடம் பெற்றுக் கொண்ட 17 இலட்சம் உட்பட ஏனையவர்களிடம் பெற்றுக் கொண்ட சுமார் 87 இலட்ச ரூபாவுடன் கடந்த ஒரு மாதத்திற்கு முன் தனது தாய், தந்தையுடன் குருநாகல் பகுதிக்கு சென்று தலைமறைவாகியுள்ளார்.

பணத்தை பறிகொடுத்து ஏமாற்றமடைந்த மக்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி செய்வதறியாத நிலையில் இளைஞனை கையும் மெய்யுமாக பிடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். (அ-3-60)




நன்றி: மிரர்

# வீதிகளில் கழிவுகள் கொட்டப்படுகின்றன

(கரணவாய்)

கரவெட்டி விக்கினேஸ்வர வீதி, கலட்டிக்கு திரும்பும் வீதி ஆகியவற்றில் கழிவுகள் கொட்டப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இவ்வாறு மேற்குறித்த வீதியில் கோழி கழிவுகள் மற்றும் உரப்பைகளில் குப்பை கட்டப்பட்ட நிலையில் போடப்பட்டுள்ளன.

இதனால் இவ்வீதியில் செல்லும் பயணிகள் மூக்கைப் பொத்தியவாறு பயணிக்கின்றனர்.

எனவே, மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு கரவெட்டி பிரதேச சபையினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-60)

# தேசிய கல்வியியற் கல்லூரி நடத்தும் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூறாவது ஆண்டுவிழா யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் பற்றிய அறிமுக உரையை அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ், நூற்றாண்டு விழாச் சிறப்புரையை பேராசிரியர் தி.வேல்நம்பி, நூற்றாண்டு விழாவின் நோக்கங்கள் பற்றிய விளக்கத்தினை அருட்கலாநிதி க.பி.ஜெயசேகரம் அடிகளார் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இதில் கல்லூரியின் 2 ஆம் வருட முகிழ்நிலை ஆசிரியர்களின் பேச்சு,பாட்டு,கவிதை, நடனம் ஆகிய நிகழ்வுகளும் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தின் **இன்றைய சமூக வாழ்வியலுக்கு பெரிதும் வழிகாட்டுவன மரபிலக்கியங்களே நவீன இலக்கியங்களே!** என்ற தலைப்பிலான சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது.

இப் பட்டிமன்ற நடுவராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார். (அ)

# சாயி நிலையத்தில் பௌர்ணமி தின நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம் பெறவுள்ளது.

காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆன்மீக நிகழ்வில் காயத்திரி மந்திரம், வேதம், பஜனை மற்றும் விசேட சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

**சொல்வதுபோல் செய்கின்றோமா** எனும் பொருளில் யோகராஜா விதுஷனும் **சாயியை நோக்கிய பயணம் எம்மைத் தேடும் தெய்வீகப் பயணம்** எனும் பொருளில் துஷியா ஆரூரனும் சொற்பொழிவு ஆற்றுவார். (அ)







யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றபோது...

# வலி.மேற்கு பிரதேச செயலகத்தினால் உதவிப் பணம் பெறுவோர் மீளாய்வு

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக சமூக சேவை பிரிவினரால் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தொடர்பான மீளாய்வு நடத்தப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 28 ஆம் திகதி ஜே/161 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/162 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஜே/163 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/164 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

4 ஆம் திகதி ஜே/165 கிராம சேவையாளர் பிரிவில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/166 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் இடம்பெறவுள்ளது.

மேலும் 5 ஆம் திகதி ஜே/167 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/168 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் 9 ஆம் திகதி ஜே/169 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/170 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் இடம் பெறவுள்ளது.

மேலும் 11 ஆம் திகதி ஜே/171 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/172 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் 16 ஆம் திகதி ஜே/173 கிராம சேவையாளர் பிரிவில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/174 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

18 ஆம் திகதி ஜே/175 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/176 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜே/177 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/178 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

23 ஆம் திகதி ஜே/179 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் ஜே/180 கிராம சேவையாளர் பிரிவில் பிற்பகல் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் 26 ஆம் திகதி ஜே/181 கிராம சேவையாளர் பிரிவில் முற்பகல் 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது.

பயனாளிகள் மேற்குறித்த திகதியில் தத்தமது கிராம அலுவலர் அலுவலகத்திற்கு குடும்ப பதிவு அட்டை, பணம் பெறும் அட்டை, தேசிய அடையாள அட்டை என்பனவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-17)

# வலி.மேற்கு மக்களுடன் கலந்துரையாடல்

(பண்டத்தரிப்பு)

வலி.மேற்கு பிரதேச செயலக காட்டுப்புலம், பொன்னாலை ஆகிய மீள்குடியமர்ந்த பகுதிகளில் வாழ்கின்ற மக்களுடைய தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பொன்னாலை காந்திஜி முன்பள்ளி மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.(அ-3-30)

# கோப்பாய் ம.வித்தி நூற்றாண்டு விழா

யா/கோப்பாய் மகாவித்தியாலய நூற்றாண்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க.வீரசிங்கம் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ்விழாவில் முன்னாள் அதிபர்களும் கௌரவிக்கப்படவுள்ளதால் அவர்கள் தங்களது விபரங்களை 0212230325 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய் இலகடி பகுதியில் விபத்து

## மயிரிழையில் உயிர் தப்பினார் பெண்மணி



(எஸ்.செல்வதீபன்)

(கரவெட்டி)

வடமராட்சி அல்வாய் இலகடி பகுதியில் உள்ள 750 பருத்தித்துறை யாழ்ப்பாண பிரதான வீதியில் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம் பெற்ற புல்டோசர்– மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமாகியதுடன் அதில் பயணித்த பெண்ணும் தெய்வாதீனமாக உயிர் தப்பி உள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் மேற்படி பகுதியில் வீதி அகலிப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புல்டோசர் அவ்வீதியால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது ஏறியமையால் மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமடைந்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்மணி சாதுரியமாக மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்தமையால் தெய்வாதீனமாக தப்பியுள்ளார் இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24-60)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>உயரம்: 5'9"<br>உயரம்: 47, 8இல் செவ்<br>தகைமை/தொழில்: B.Com,NDBS பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: B -1465 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 27.5<br>தகைமை/ தொழில்: HNDA<br>எ.பா:சைவபோசனம்<br>தொ.இ: G -1488 |
| பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'5"<br>கி.பா: 8<br>தகைமை/தொழில்: BSc<br>நிலஅளவையாளர் (அரச)<br>தொ.இ: B -1468 | பிறப்பு: 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 1, 4 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்: BA (Hons) தனியார்துறை<br>தொ.இ: G-1489 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி<br>சூரி, செவ் ஒரே வீட்டில்<br>உயரம்: 5'11"<br>தகைமை/ தொழில்: Qualified to Management Business (சொந்தம்)<br>தொ.இ: B -1471 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா: 48<br>தகைமை/ தொழில்:B.Sc, Computer<br>தொ.இ: G -1495 |
| பிறப்பு: 1982 றோ.க<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>உயரம்: 5'<br>கி.பா: 54, 7 இல் செவ்<br>தகைமை/தொழில்: Software Engineering<br>தொ.இ: B -1472 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>தகைமை/ தொழில்: O/L, விவாகரத்து<br>தொ.இ: G -1496 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

### POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE II

Applications are invited by me up to 26.04.2013 from suitably qualified persons for the post of Works Engineer [Civil], Grade II.

**QUALIFICATIONS:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized

University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers

**AND**

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of

Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour

**Method of Recruitment** : Selection by a structured interview. Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

**Salary Scale:** U- EX2 (II) Rs. 33,745-8X645; 8X790 - 45,225/- p.m

**AGE:** Not more than 45 years. Age limit is not applicable for applicants in the Government Departments, State Corporations and Statuary Bodies

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non - Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University Of Jaffna**.

The envelope containing duly filled application form must bear "the name of the post applied for" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 26th April 2013.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

*REGISTRAR,*
*University of Jaffna,*
*25.03.2013.*

(அ/2802)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நட்டஈடு கொடுப்பனவு பெற விரைவில் விண்ணப்பியுங்கள்

(மல்லாவி)

முல்லை. மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களில் வன்னியில் இடம்பெற்ற போர் காரணமாக பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான சொத்து இழப்பு நட்டஈட்டுக்கான விண்ணப்ப முடிபு திகதி எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதால் இதுவரை விண்ணப்பிக்காது இருக்கின்ற அரச உத்தியோகத்தர்களை உடன் விண்ணப்பிக்குமாறு முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கான திகதி நீடிப்பு மூன்றாவது தடவையாக நீடிக்கப்பட்டுள்ளதால் இறுதி சந்தர்ப்பமாக இதனை பயன்படுத்தி விண்ணப்பிக்க தவறிய அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் தங்கள் திணைக்கள தலைவர்கள் ஊடாக எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தினை புனர்வாழ்வு அமைச்சுக்கு கிடைக்க கூடியதாக அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# இருதயநோய் மருத்துவ சேவை

(பூந்தோட்டம்)

வன்னி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தினால் மன்னாரில் இருதயநோய் இலவச மருத்துவ சேவை இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. இம் மருத்துவ சேவையானது வன்னி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் தளபதியும் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தும் பிரதம அதிகாரியும் சிங்க ரெஜிமெண் படைபிரிவின் கட்டளை அதிகாரியுமான மேஜர் ஜெனரால் எம்.எச்.எஸ். பொலிபஸ் பெரேராவின் ஆலோசனைக்கமைய நடைபெறவுள்ளது.

இந்த இலவசமருத்துவ சேவையில்கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதன் போது ECO, ECG ஆகிய விசேட மருத்துவ்பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-266)

# தாச்சி சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கைதடி விநாயகர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் தாச்சிச்சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகளில் இரவு 7 மணிக்கு கைதடி துர்க்கா ஏ விளையாட்டுக்கழகத்தினை எதிர்கொண்டு கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகமும் இரவு 8 மணிக்கு சுழிபுரம் பயஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினை எதிர்கொண்டு புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகமும் தாச்சிக்கோடு களமிறங்கவுள்ளன.

கைதடி துர்க்கா ஏ விளையாட்டுக்கழகத்திற்கும் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணிக்குமான அரையிறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது. எனினும் குறித்த தாச்சிப்போட்டியில் இரு விளையாட்டுக்கழக அணிகளும் சமநிலை புள்ளிகளை பெற்றிருந்த நிலையில் மீண்டும் 5 நிமிட வேளை மேலதிகமாக கொடுக் கப்பட்டிருந்தது.இதன் போது இரு அணிகளும் சம புள்ளிகளைப் பெற்ற நிலையில் முடிவடைந்த போட்டி மீண்டும் இன்று இடம்பெறவுள்ளது.

இதேவேளை சுழிபுரம் பயஸ்ரார் மற்றும் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகங்கள் இன்று காலிறுதிப் போட்டியில் தாச்சிக் கோடு களமிறங்குகின்றன. (அ-5)


## சாரதி பதவிக்கான விண்ணப்பம்

உழவியந்திரம் உட்பட சகல வாகனங்களும்
ஓட்டக்கூடிய அனுபவமும் சேவை
மனப்பான்மையும் உள்ள சாரதிகள் தேவை

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்**

**வயதெல்லை :** *21 வயதுக்கு மேற்பட்டவராகவும் 50 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும்.*

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (கிழமை நாட்கள் மட்டுமன்றி சனி, ஞாயிறு, ஆகிய நாட்களிலும் பணியாற்ற வேண்டும்.)

**விண்ணப்ப முடிவுத் திகதி : 03.04.2013**

**தி.இராஜநாயகம்**
*தலைவர், மகாவோ ஆச்சிரம சிறுவர் இல்லம்,*
*ஜெயந்தி நகர், கிளிநொச்சி.*


# ஜெனீவா நிகழ்ச்சி நிரலில் இலங்கை விடயம் தொடர்ந்தும் இருக்கும்

## அமைச்சர் பீரிஸ் கொதிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையை தொடர்ந்தும் உள்ளடக்கும் நோக்கில் அமெரிக்கா தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தீர்மானத்தின் ஊடாக ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கு ஒரு தடவையும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நடைபெறும் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள அமர்வுகளிலும் இலங்கை நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உரையாற்றுவார் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான இலக்குகளை நவநீதம்பிள்ளை காலத்திற்கு காலம் மாற்றியமைத்து வருவதாகவும் நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நவநீதம்பிள்ளை இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த வலயத்தில் எவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை நவநீதம்பிள்ளை தனது கண்களினால் நேரடியாக பார்வையிட வேண்டுமென அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசாங்கத்தின் அடாவடிக்கு பலமான எதிர்க்கட்சி இன்மையே காரணம்- சரத்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் ஐந்து ஆண்டுகளுக்கு தனது ஆட்சியை நீடித்தால் அமெரிக்க டொலரின் பெறுமதி 200 ரூபாவாக உயர்வடையும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்டி குண்டசாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இராணுவத்தில் இணைந்து கொண்ட போது ஒரு அமெரிக்க டொலரின் விலை 4 ரூபாவாகும். இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போது அமெரிக்க டொலரின் பெறுமதி 100 ரூபாவாகும். தற்போது அமெரிக்க டொலரின் விலை 130 ரூபாவாகும்.

இன்னும் ஐந்து ஆண்டுகள் இந்த அரசாங்கம் ஆட்சி செய்தால் டொலரின் பெறுமதி 200 ரூபாவாக உயர்வடையும். 60 ஆண்டுகளாக இந் நாட்டில் பல அரசா ங்கங்கள் ஆட்சி செய்துள்ள போதிலும் ஒப்பீ ட்டளவில் நாட்டில் அபி விருத்தி ஏற்படவில்லை. அபி விருத்தி என்ற பெயரில் அரசாங்கம் பாரிய ளவு கடன்களைப் பெற்றுக்கொள்கின்றது.

இந்தகடன்தொகையில் பாரியளவு தரகுப்பணத்தைஆளும் கட்சியினர் பெற்றுக் கொள்கின்றனர்.

உலகின் மிக விலை உயர்ந்த வாகனங்களில் தங்களது பிள்ளைகள் செல்ல வேண்டுமென ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வலுவான எதிர்க்கட்சி இல்லாமை ஓர் பிரதான காரணமாகும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


## அறிவித்தல்

*மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)*
*வட்டாரம் : 5, விளாத்தியடி றோட், ஆதன இலக்கம் : 68*

வட்டாரம் : 05 விளாத்தியடி றோட், ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 68இல் அமைந்துள்ள (உறுதிப்படி : வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி , மானிப்பாய் கோவிற்பற்று, ஆனைக்கோட்டை இறை "சாமச்சாட்டி" எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப் பரப்பு ஒன்றும் (நில.பர 01 கொண்ட ஆதனம்) இவ் வாதனமானது கொக்குவில் மேற்கு, வராகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த கிருஷ்ணப்பிள்ளை பிரான்சிஸ் கைம் பெண் திரேசா சந்திரா ஆகிய இவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 14783 ஆம் இலக்க 2013.01.03ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் "சாமச்சாட்டி" நிலப்பரப்பு 01இல் உள்ள இவ் வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களு டன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் உரிமை கோரப்படாத விடத்து இவ்வாதனம் பிரான்சிஸ் கைம்பெண் திரேசா சந்திரா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

(2239)



# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 25.02.2013 அன்று
சிவப்பேறு அடைந்த எமது
குடும்பத்தலைவி

**அமரர் திருமதி**
**சுப்பிரமணியம்**
**நாகம்மா**

அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை எதிர்வரும் 27.03.2013 அன்று கீரிமலையிலும் வீட்டிலும் இடம்பெறும். 31.03.2013 ஞாயிறு அன்று நண்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் நடைபெறும். இதில் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். குறிப்பாக குடும்பத்தலைவியின் இறுதிக்காலத்தில் அன்பும் ஆதரவும் தந்த உறவுகளுக்கும் அந்திமச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்திகளை தந்தி மூலமோ தொலைபேசி மூலமோ தந்தவர்களுக்கும் குறிப்பாக அஞ்சலியை வெளியிட்ட வலம்புரிக் குடும்பத்தினருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(சி/2796)

**குடும்பத்தினர்**
*கந்தரோடை கிழக்கு, சுன்னாகம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன பொருட்கள் வருகையை தடுக்க திட்டம்

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபார்சுகள் நடைமுறைக்கு

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட தென் கிழக்காசிய நாடுகளுக்கும் ஆசிய பசுபிக் நாடுகளுக்கும் கதிர்த்தாக்க மற்றும் இரசாயனப் பொருட்கள் வருவதைத் தவிர்ப்பதற்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஒன்றிணைந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது.


இது தொடர்பான உயர் மட்ட சர்வதேச பேச்சுவார்த்தையொன்று கடந்த வெள்ளியன்று கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது சுகாதார அமைச்சின் சார்பில் பங்கு பற்றிய சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாய கம் டாக்டர் பாலித மஹீபால கருத்துரைக் கையில்,

இலங்கைக்குள் கதிரியக்க மற்றும் இரசாயனப் பொருட்கள் அடங்கிய உணவு பொருட்களும் ஏனைய பொருட்களும் கொண்டு வரப்படுவதைத் தவிர்ப்பதற்குரிய தேவையான ஆய்வுகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. குறிப்பாக சுகாதார அமைச்சும் அணுசக்தி அதிகார சபையும் உணவுப் பொருட்களின் மாதிரிகளை தொடர்ந்தும் ஆய்வு செய்து வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய உலக சுகாதார ஸ்தாபனம் தம் உறுப்புரிமை நாடுகளுக்குள் கதிரியக்க மற்றும் இர ாயனப் பொருட்கள் செல்வதை தவிர்க்கவும் அவற்றின் பாதிப்புக்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் இலங்கை, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளதும் சர்வதேச அணுசக்தி முகவரகம் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் வேலைத் திட்டம், ஜப்பானின் அணு விஞ்ஞானத்திற்கான தேசிய நிலையம், உலக ஸ்தாபனம் ஆசிய திடீர் விபத்து தவிர்ப்பு மத்திய நிலையம் உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ-2)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறைக்கு விஜயம் செய்தபோது....

# நாட்டுக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிக்க முடியாத அரசாங்கம்

## சஜித் எம்.பி தெரிவிப்பு

சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்க முடியாத அரசாங்கமே ஆட்சி செய்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பண்டுவஸ்நுவர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் 12 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானம் 17 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது. கடந்தாண்டு 9 மேலதிக வாக்குகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டுக்கு எதிரான தீர்மானத்தை தோற்கடிக்க முடியாத அரசாங்கமே தற்போது ஆட்சி நடத்தி வருகின்றது. இயலாமையுடன் கூடிய ஓர் கூட்டம் நாட்டின் வெளி யுறவுக் கொள்கையை அமுல்படுத்தி வருகின்றமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. (அ-2)

# பங்குனி மாதத்திற்கான பௌர்ணமி பூஜை

(யாழ்ப்பாணம்)

சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் சீடத்தினால் நடத்தப்படும் பங்குனி மாதப் பௌர்ணமிபூஜை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சட்டநாதர் கோவிலடி, நல்லூர் என்ற முகவரியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். வழிபாட்டு நிலைய செவ்வாடைத் தொண்டர்கள் அறிவித்துள்ளனர்.

அன்றைய தினம் தொண்டு பூஜை, மந்திர வழிபாடு, தியானம், பஞ்சபூத வழிபாடுகள் என்பன நடைபெறவுள்ளன. (அ-5)

# கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் நூல் வெளியீடு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் வெளியீடாக ஞா. ஜெகநாதன் எழுதிய நாகர் எழு என் னும் வன்னி நூல் வெளியீடு எதிர் வரும் ஏப்ரல் மாதம் 6 திகதி காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தான ந்தா இந்து இளைஞர் சங்கத்தின் கலாசார மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக செட்டிகுளம் பிரதேச செயலாளர் நா. கமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் க. அருள்வேல், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா. சேனாதிராஜா ஆகியோர் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு விசேட விருந் தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பேராசியர் செல்லையா கிருஸ்ணராசா, கிழக்கு பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையின் மொழித்துறை பதில் தலைவர் பேராசிரியர் செ. யோகராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா, வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளர் திருமதி ப. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா நகரசபை தலைவர் ஐ.கனகையா, செட்டிகுளம் பிரதேச சபைத் தலைவர் கபிரியேல் அந்தோனி ஐயா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம், வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சி. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையினை கலாநிதி க.ஸ்ரீகணேசன் ஆற்ற நயப்புரையினை தமிழ் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் கி. உதயகுமார் நிகழ்த்தவுள்ளார். (அ-2-266)

# அமெரிக்காவின் தீர்மானத்தால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது

## அமைச்சர் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறையில் நடைபெற்ற தயட்ட கிருள நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமோ அமெரிக்கா மற்றும் இந்தியாவின் நாடகங்களோ இலங்கையை பாதிக்காது. காலனித்துவ நாடுகளை விடவும் பௌத்தத்தினால் செழுமையான இலங்கை மிகவும் வலுவானது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிட ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மறந்து விட்டது. கர்ப்பிணிப் பெண்களை புலிகள் கொடூரமாக கொலை செய்தபோது எந்தவிதமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படவில்லை.

நாட்டில் துறைமுகங்கள், விமான நிலையங்கள் உள்ளிட்ட பாரியளவில் அபிவிருத்தித் திட்டங்களை பொறுத்துக் கொள்ள முடியாத காலனித்துவ நாடுகள் இலங்கைக்கு எதிராக சதித் திட்டங்களை தீட்டுகின்றன. நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தியைக் கண்டு சில நாடுகள் பொறாமைப்படுகின்றன என்றார். (அ-2)

# இலங்கையர்கள் பயணித்த பேருந்தில் விபத்து

இந்தியாவில் இலங்கைச் சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்த பேருந்தொன்று தீ விப த்துக்குள்ளானதாகத் தெரிவிக்க ப்படுகிறது.

உலகின் உயரமான பௌத்த தூபிகளில் ஒன்றான கேசரியா தூபியை தரிசிக்கச் சென்ற இலங் கையர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் தெய்வாதீனமாக விபத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. விபத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இதனால் ஒரு மில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், சுற்றுலாப் பயணிகளின் கடவுச் சீட்டுக்கள், சூட்கேஸ்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களும் தீக்கிரையாகி நாசமாகியுள்ளன. (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## உண்மை எம்மை சரியான பாதையில் வழி நடத்த வழிவிடுவோம்



இயேசு உள்ளம் கலங்கியவராய் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்று இயேசு கூறும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகிறது.

யாரைப் பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்று ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். இப்பகுதியில் தன்னைக் காட்டிக் கொடுக்கும் சீடர் யார் என்று இயேசு சுட்டிக்காட்டுவதை அறிகிறோம். என் பகைவன் என்னைக் காட்டிக் கொடுத்திருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் என்னோடு உண்பவன் அல்லவா. எனக்கு எதிராக எழுந்துள்ளான் என்று திருப்பாடல் ஆசிரியர் சொல்வது இங்கு நாம் நினைத்துப்பார்க்கலாம். நாமும் எம் இருப்பை காத்துக் கொள்ள இந்த பச்சை துரோகத்தனத்தை பல வழிகளில் செய்கின்றோம்.

சீமான் பேதுரு இயேசுவிடம் ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்? என்று கேட்டார். இயேசு நான் போகுமிடத்திற்கு என்னைப் பின்தொடர்ந்து வர இப்போது என்னால்இயலாது. என்னைப் பின் தொடர்வாய் என்றார். பேதுரு ஆண்டவரே நான் உமக்காக என்னுயிரையும் கொடுப்பேன் என்றார். இயேசு அவரைப் பார்த்து எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்கு முன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன் என்றார்.

உண்மையில் வாழ்வதென்பது நமக்குப் பல்வேறு சூழ்மைகளில் முடியாது போகின்றது. பேதுருவுக்கும் இந்நிலை தான் ஏற்பட்டது. இக்கட்டான சூழல் வந்த போது இயேசுவை மறுதலித்தார். யூதாசு இயேசுவைக்காட்டிக் கொடுத்து வாழ்வை இழந்தான். ஆனால் பேதுரு தனது பாதகச் செயலுக்கு மனம் நொந்தழுதார். மறு வாழ்வு பெற்றார். நமது உள்மனது. இந்த உண்மையை சொல்லாது விடாதே என்று பலமுறை சொல்வதைக் கேட்ட பின்பும் கூட பொய்க்குத் துணையாக நாம் எத்த னை தடவை நின்றிருக்கிறோம். [illegible] அது தான் சரியான பாதையை நெறிப்படுத்தும்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

409

## அம்புலிமாமா கதைகள்

# யாருக்கு மாப்பிள்ளை யாரோ?



அன்றும் வழக்கப்படி பார்வதி முகுந்தனிடம் என்னங்க! நானும் எத்தனை நாட்களாய் கெஞ்சுகிறேன்? நமது மகளுக்குக் காலாகாலத்தில் கல்யாணம் செய்துவைக்கவேண்டும். என் அண்ணனின் பிள்ளை ராமனுக்குக் கட்டிவையுங்கள் என்று எத்தனையோ தரம் சொல்லி விட்டேன் என்று நச்சரிக்க ஆரம்பித்தாள். பார்வதியின் மருமகன் ராமன் தன் குடும்ப வேலையான விவசாயத்தில் ஈடுபடாமல் உடம்பைத் தேக்கு மரம்போல் வளர்த்துக்கொண்டு மல்யுத்தப் போட்டிகளில் கலந்து கொண்டு வந்தான். நிரந்தர வேலை இன்றி குஸ்திச் சண்டையில் ஈடுபட்டிருந்த ராமனுக்குத் தன் பெண்ணை கல்யாணம் செய்து வைக்க முகுந்தனுக்கு சிறிதும் விருப்பமில்லை. மனைவியிடம் எதிர்வாதம் செய்யாமல் பல ஆண்டுகளாகத் தலையை ஆட்டி வந்தவன் அன்று முதன்முதலாக வாயைத் திறந்து கேட்டான்.

பார்வதி அவனால் நம் பெண்ணைக் கட்டிக் காப்பாற்ற முடியுமா? என்றான் முகுந்தன். ஏன் முடியாது! என்று உற்சாகத்துடன் துள்ளிய பார்வதி அவன் அரண்மனையில் ராஜாவின் முன் மல்யுத்தப் போட்டிகளில் பங்கேற்று ஜெயிக்கும் வீராதி வீரன்! எத்தனை பரிசுகளை ஒவ்வொரு வருடமும் அள்ளிக்குவிக்கிறான் தெரியுமா? அவனைக் கட்டிக் கொண்டால் நம் பெண்ணை அவன் ராஜாத்திபோல் வைத்திருப்பான் என்று மருமகன் புகழ் பாடினாள்.

பேதையான அவளுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது? போட்டிகளில் கிடைக்கும் பரிசுகளைத் தவிர மற்றப்படி வேறு எந்த வருமானத்துக்கும் வழியற்றவன். தன்னுடைய பெண்ணை எப்படி கண் கலங்காமல் வைத்துக் காப்பாற்றுவான். அதற்குள் பார்வதி அவனை உலுக்கி வாயைத் திறந்து சம்மதம் என்று சொல்லுங்களேன் என்றாள். அது சரி! நம்முடைய பெண்ணிடமும் அவள் அபிப்பிராயத்தைக் கேட்டாயா? என்றான் முகுந்தன்.



அவளை என்ன கேட்கிறது? நாம் சொல்லும் ஆண்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டாமல் அவளால் இருக்க முடியுமா? நீங்கள் சும்மாயிருங்கள். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் என் அண்ணனிடம் சென்று பேசுங்கள் என்று அவசரப்படுத்தினாள்.

தினசரி அவளுடைய நச்சரிப்பைப் பொறுக்கமுடியாமல் முகுந்தன் ஒருநாள் தன் மைத்துனனைத் தேடிப்புறப்பட்டான். மைத்துனனின் கிராமத்தை அடைவதற்குள் வெயிலின் உக்கிரம் தாங்காமல் கிராம எல்லையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இளைப்பாறினான். அங்கு மரத்தடியில் வழிப்போக்கர்களின் தாகம் தீர்ப்பதற்காகவென்றே இரண்டு பானைகளில் குடிநீர் நிரப்பப்பட்டு இருந்தது.

ஆயாசம் தீர முகுந்தன் பானை நீரை மொண்டு மொண்டு குடித்தான். அப்போது அந்தப் பக்கம் ஓர் இளைஞன் இரண்டு பானை நிறைய குடிநீரைக் காவடிபோல் தூக்கி வந்தான். அவன் மரத்தடியில் இருந்த பானைகளில் தான் கொண்டு வந்த நீரை நிரப்பினான்.


அவனை யாரென்று முகுந்தன் விசாரிக்க அவன் நான் ஒரு விவசாயி! தினமும் இங்குள்ள பானைகளில் குடிநீரை நிரப்பிச் செல்கிறேன். தாகத்தினால் அவதிப்படும் உங்களைப் போன்ற பயணிகளுக்காகவே இதை நான் செய்கிறேன் என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட முகுந்தன் அந்த இளைஞனை அப்படியே தழுவிக்கொண்டான். தம்பி! நீ யாரோ தெரியாது! ஆனால் என் கண்ணுக்குத் தெய்வம் போல் காட்சி தருகிறாய். உண்மையைச் சொல்லப்போனால் வெயிலில் நடந்துவந்த நான் மயங்கியே விழுந்திருப்பேன். தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுத்து தெய்வம் போல் காப்பாற்றினாய் என்று மனமாரப் புகழ்ந்தான்.

எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பாராமல் யாரோ முன்பின் தெரியாத வழிப்போக்கர்களுக்கு உதவும் அந்த இளைஞன் தன் விவசாயத் தொழிலையும் தன்னுடைய பெற்றோரையும் கவனித்துக்கொண்டு ஊருக்கும் உபகாரம் செய்யும் அந்த உத்தமன். முகுந்தன் மனதில் அந்தக் கணமே நீங்காத இடம் பிடித்துக் கொண்டு விட்டான். அவனைப் பற்றிய முழு விபரங்களை அறிந்து கொண்டபின் மெதுவாக தன்னுடைய மைத்துனன் வீடு சென்றான்.

வீட்டில் எல்லோரும் இளைத்து சோர்ந்து போயிருக்க ராமன் மட்டும் திடகாத்திரமாக இருந்தான். தன் மைத்துனனிடம் ஏன் வீட்டில் மற்றவர்கள் வாடி வதங்கியபடி இருக்கின்றனர் என்று கேட்க அவர் வருகின்ற வருமானம் எல்லாம் ராமனுக்குத் தீனி போடவே சரியாக இருக்கிறது. அடுத்த வாரம் நடைபெறப் போகும் மல்யுத்தப் போட்டிக்காக ராமனுக்கு கோயில் யானைக்குத் தீனிபோடுவது போல் செலவழிக்க வேண்டியுள்ளது. அதனால் நாங்கள் பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல் இருக்கிறோம் என்றார்.

அதற்குமேல் மைத்துனரிடம் எதுவும் பேச விரும்பாத முகுந்தன் மைத்துனர் வீட்டில் ஒருவேளை சோறு கூட உண்ணாமல் வீடு திரும்பினான். வீடு வந்ததும் தன் மனைவியிடம் நடந்தவற்றை விபரமாக விளக்கிய பின் தன் மகளை ராமனுக்குக் கொடுக்கப் போவதில்லையென்றும் தன் தாகம் தீர்த்த இளைஞனுக்கே கொடுக்கப்போவதாகவும் அறிவித்தான்.



என்ன ஆச்சரியம்! இம்முறை அவன் மனைவி பார்வதி அதெல்லாம் முடியாது என் மருமகனுக்குத்தான் கட்டி வைக்கவேண்டும் என்று சொல்லவேயில்லை. பதிலாக முகுந்தனுடைய விருப்பத்திற்குத் தானும் சம்மதம் தெரிவித்தாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**83**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!




**வாய்க்கா**மேடு தாண்டிட்டா மரம் அடி வாங்கிரும்னு நெனைக்கிறப்ப வண்டி நின்டு போச்சு வாய்க்கா மேட்டுலயே. சத்தமும்கேக்கல; வண்டியும் நகரல. என்னமோ ஒரு கூத்தாகி நின்டுபோச்சு எந்திர யானை. நின்டுபோன வண்டிய ஓங்கி ஒரு எத்து எத்திட்டு வண்டிய விட்டுக் குதிச்சுட்டான் முத்துமணி. வண்டிக் குள்ள முள்ளு வெட்டக்கிடந்த வெட் டருவாள எடுத்து எறங்கிட்டான்.

"இந்தச் சனியனுங்கள வெட்டி எறியாம எங்கிட்டிருந்து வழி உண்டாகறது?" முதல்ல தாத்தன் மரத்தை வெட்ட நோங்கிட்டான்; அருவாளையும் ஓங்கிட்டான்.

பளிச்சுன்னு தவ்விப் பின்னங் கையில மரத்தக்கட்டி நெஞ்சைக் காட்டி நின்னுட்டாரு கருத்தமாயி. தகப்பன் மரத்தோட; மகன் அருவா ளோட.

"வேணாம்; ஒதுங்கிக்க; வெட் டப் போறேன் மரத்தை"

"ஏலே முத்துமணி... வெறி புடிச்சு அலையாதடா. நம்ம வம்சத்த வெட்டாதடா... குலசாமியக் கொல் லாதடா"

"குலமாவது சாமியாவது? என்னி யப் பொழைக்கவிடாத குலம் எடுக்கு? சாமி எதுக்கு? இதுகள வெட்டிப் பாதை உண்டாக்கி அடுத்த நிலத்துக்குப் போகணும் வழிவிடு"

"சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு நிக்கிறன்டா. அப்பனுக்குக் கோவம் வராதுன்னு நெனச்சிராத"

"ஏய்! உன் கோவம் என் ரோமத் தைப் புடுங்கிருமாக்கும். வெலகிக்க; இல்ல உன்னையும் சேத்து வெட்டு வேன்"

"வெட்டு பாப்போம்" விழுந்துருச்சு ஒரு வெட்டு சீனிச்சாமி மரத்துமேல.

"ஏலேய் முத்துமணி..." குரல் மாறிப்போச்சு கருத்தமாயிக்கு. உடுக்கு அடி மாதிரி கேக்குது அவர் பேசுற சத்தம்.

நிதானத்துல இல்ல முத்துமணி; மிருகம் ஏறி நிக்குது அவன் கண்ணுல; அருவாப்பிடி இறுகுது; ஆத்தா மரத்துல விழுகப்போகுது அடுத்த வெட்டுன்னு தெரிஞ்சதும் மளார்னு தவ்வி ஆத்தா மரத்தை அணச்சுப் புடிச்சாரு கருத்தமாயி.

முத்துமணி அருவா இறங்கவும் தண்ணிப் பாம்பு மாதிரி தலைய விசுக் குன்னு உள்ள இழுத்துக்கிட்டாரு. இல்லேன்னா மரத்துல விழுந்த வெட்டு அவரு உச்சந்தலையில விழுந்து பூசாரி தேங்கா உடைச்ச மாதிரி ரெண்டுதுண்டாப் பொளந்தி ருக்கும் கபாலம்.

"வேணாமுடா மகனே... நானும் மனுசன்தான்டா" ஆத்தா மரத்த அவரு காத்து நிக்கத் தங்கச்சி மரத்துல விழுகுது ஒரு வெட்டு. படக்குன்னு தவ்வி இப்பத் தங்கச்சிமரம் காத்து நிக்கிறாரு கருத்தமாயி.

"வேணாமுடா. நானும் ஒரு காலத் துல அருவா வீசுனவன்தாண்டா"

இப்ப இஷிமுரா அவுக அப்பன் மசாமி மரத்துமேல எறங்கப்போகுது அருவா. கொலகாரப் பாவி விழுந்த அருவாள எறங்கவிடாமப் புடிச்சாரு எடது கையால. ஆள்காட்டி விரலுக் கும் கட்டைவிரலுக்கும் மத்தியில இருந்த சவ்வுல விழுந்து மணிக்கட்டு வரைக்கும் ஆழமா எறங்கி ரெண்டா வகுந்துருச்சு அருவா.

காயப்போட்ட துணிய உருவி யெடுத்த பெறகு கொடியில தொங் குமா இல்லையா கிளிப்பு... அப்பிடித் துண்டாத் தொங்குது கட்டை வெரலு. ஒத்தை நூலுல ஊசலாடற சிலந்திப் பூச்சிமாதிரி ஒத்தைச் சவ்வுல தொங் குது அந்த ஒத்தை வெரலு.

அடுத்த வெட்டு விழப் போகுது இஷிமூரா அவுக ஆத்தா மரத்துல. இப்ப அந்த மரத்தக் காத்துநிக்கிறாரு கருத்தமாயி.

அவன் பொறந்தன்னைக்கிருந்து



கருத்தமாயி இதுவரைக்கும் கேக்காத ஒரு குரல்ல முத்துமணி பேசறான்;

"ஒன்னிய வெட்டிட்டு மரத்த வெட்டவா? இல்ல மரத்த வெட்டிட்டு ஒன்னிய வெட்டவா?"

"ஏலேய் மகனே... எனக்குள்ள கெடந்த சிங்கம் புலிய எழுப்பிட்டி யேடா" நாலு எட்டு பின்னுக்குப்போயி அப்பன வெட்ட ஓடி வந்தான் முத்துமணி.

மாளர்னு பத்தடி பின்னுக்குத் தவ்வி ஓடி அப்பன் மரத்துக்குக்கீழ புலி பூமியத் தோண்டற மாதிரி வலது கால்ல மண்ணப் பறிச்சாரு கருத்த மாயி. முப்பத்தேழு வருசத்துக்கு முன்ன கவட்டைக்காலன வெட்டிட்டு பூமிக்கடியில புதைச்சு வச்ச வீச்சருவா வாரேன் வாரேன்னு வருது வெளிய.

வெடைச்சுக் கிடந்த அருவாப்புடி மட்டும் தெரியுது கண்ணுக்கு. புடி நுனியில கால்பெருவிரல வச்சு சைசா அமுக்கி ஒரு உந்து உந்தவும் வந்து விழுந்துருச்சு அருவா வலதுகையிக்கு.

அவர் தோள்பட்டையக் குறிவச்சு வாரான் முத்துமணி. இந்தா.,. இந்தா... எறங்கப்போகுது அருவா. தலைக்கு மேல வந்த அருவாளத் தோது பாத்துத் தடுத்துத் தட்டிவிட்டுப் போட்டாரு ஒரு போடு வெட்ட வந்த வன் கழுத்துல. தோலக் கிழிச்சு சதை யில எறங்கி, ரத்த நாளம் கடந்து, சவ்வப் பொளந்து, கழுத்தெலும்ப ஒடச்சு, உள்ள புகுந்து, முதுகுத் தண்டு நரம்ப அறுத்து, உசுர வாங்கித் தலையத் தொங்கவிட்டு சங்குக் குழியில நின்னுபோச்சு அருவா.

முப்பத்தேழு வருசத் துருவை முத்துமணி ரத்துத்துல கழுவணு முன்னு கெட்ட வரம் கேட்டு வந்தி ருக்கு அந்த அருவா.

ரொம்பத் துடிக்கல ஒடம்பு; பொட் டுன்னு போயிருச்சு உசுரு.

வேரறுந்த மரம் மாதிரி மகன் பொணத்துல விழுந்து கருத்தமாயி கதறுன கதறலக் கேட்டு ஒரு பத்து மைல் சுத்தளவுக்கு ஏழெட்டு நாளா இரை எடுத்திருக்க முடியாது எந்தப் பறவையும்; தண்ணி குடிச்சிருக்க முடியாது எந்த ஆடு மாடும்.

☆☆☆☆☆☆

"அய்யா... இன்ஸ்பெக்டரு அய்யா... எம்பேரு கருத்தமாயி. எம் மகன வெட்டிக் கொன்டுபுட்டேன். அதுக்கு நாந்தான சாட்சி. எந்தக் கோர்ட்டுலயும் இதத்தான் சொல்லுவேன். இந்தாங்க அருவா; எழுதுங்க கேச"

தேவதானப்பட்டிப்போலிசுல சரண்ட ராகி உண்மையச் சொல்லிப்புட்டு ஒரு ஓரமா உக்காந்து, அந்து தொங்குற கட்டை வெரல வெளிய விடாம உள்ளங்கைக்குள்ள வச்சு அழுத்தி அழுக்கிக்கிட்டாரு.

சந்தைக்குப்போன சனமெல்லாம் போலீஸ் ஸ்டேசன் வாசல்ல வந்து கூடிக் குமிஞ்சு போச்சு. கூட்டத்தை வெலக்கித் தலவிரி கோலமா அழுது வாரா சிட்டம்மா.

"அய்யா... என் ஆம்பள... என் னய்யா பண்ணிப்புட்ட? என் புள்ளை யையும் கொன்னு என் பொழப்பை யும் கொன்னு திருப்பி செயிலுக்குப் போறியா சாமி? எப்படிப் பொழப் பேன் நீயில்லாம? எம் மேலயும் ஒரு அருவா வீசிட்டுப் போயிட்டீன்னா என் சென்மம் சிரமம் ரெண்டும் சேந்து அடங்கிருமில்ல. இந்தப்பொச கெட்ட சிறுக்கிய ஒத்தையில விட்டுட் டுப் போறியா ராசா?"

அவ கத்தி அழுது கதறக் கதற கருத்தமாயி அழுகுறாரு;

வேடிக்கை பாத்த ஊர்ச்சனம் அழுகுது; ஒண்ணு ரெண்டு போலீஸ் காரகளும் அழுகுறாக.

ரத்தம் ஒறஞ்சு போச்சு; கண்ணீர் கொட்டுது கருத்தமாயிக்கு.

"பேசிட்டியா தாயி? பேசிட்டியா? பேசிட்டியில்ல? பேசாமப் போனாலும் பாசக்காரிடி நீயி. உம்மேல உசுரையே வச்சிருக்கேன்டி. இதுபோதும் தாயி. இனி எனக்குத்தூக்குச் சொன்னாலும் துன்பமில்ல. இப்பவும் சொல்றேன்- உனக்கு நான் ஒரு நாளும் துரோகம் பண்ணுனது இல்ல. சத்தியம் பண் ணட்டுமா?"- படக்குன்னு குனிஞ்சு உள்ளங்கையில ஒளிச்சுவச்ச கட்ட விரல வெளிய எடுத்தாரு.

"யாத்தே"ன்னு அலறுனா சிட்டம்மா. தொங்குன சவ்வப் பல்லுல கடிச்சுத் துண்டா எடுத்தாரு கட்டைவிரல. அத ரத்தத்துல அமுக்கி ஏட்டு மேசை மேல இருந்த ஒரு வெள்ளைத்தாள்ல உருட்டுனாரு. பதிஞ்சுச்சு ரேகை. அந்த வெள்ளைத் தாள்ல கட்டை விரல மடிச்சாரு. விரல சிட்டம்மா கையில கொடுத்துட்டுச் சொல்றாரு:

"இந்த ரேகை சத்தியமா உனக்குத் துரோகம் பண்ணல சிட்டம்மா"

அவ மளார்னு அவரு மடியில விழுந்தா.

உடம்புக் குலுங்கிக் குலுங்கி உசுரு சிதறுது.

ரொம்ப நேரமா எந்திரிக்கல அவ.
எந்திரிச்சுப் பாத்தா-
அவரு வேட்டியெல்லாம் கண்ணீரு;
அவ மூஞ்சியெல்லாம் ரத்தம்.

பத்துப் பன்னண்டு நாளைக்கு அப்பறம்தான் தோட்டத்துக்குப் போறான் சின்னப்பாண்டி. கிணத்து மேட்டுல நின்னு வானத்தையும் பூமியையும் மாறிமாறிப் பாக்குறான். இப்பிடி ஒரு சம்பவம் நடந்ததா பூமிக்கோ வானத்துக்கோ ஒரு தகவலும் இல்ல. அதுகதுக வேலை கள அதுகதுக செஞ்சிக்கிட்டிருக்குக எப்பவும்போல.

இட வலமாகவே சுத்துது இப்ப வும் பூமி. தெக்க வடக்க மாறி மாறி அடிக்குது காத்து. அந்த தெய்வ மரங் கள்ல எப்பவும் போல சண்டையும் சரசமும் பண்ணிக் கூத்தடிக்குதுக காக்கா குருவிக. பூமிய எப்பத் தொடணும் எப்ப விலகணும்னு தொழில் மாறாமச் செய்யுதுக இருட்டும் வெளிச்சமும்.

## "வேரைப் பகைச்ச பயிரும், ஊரைப் பகைச்ச உயிரும் வீடு சேரமுடியாதுடா"


வாய்க்கா வழியா நடந்து போனான் சின்னப்பாண்டி. புடிய விட்டுத் தனி யாக் கெடந்துச்சு அப்பன் கடைசியா வெட்டுன மம்பட்டி. குனிஞ்சு எடுத்தான். மம்பட்டி- புடிய ஒண்ணு சேத்தான். சட்டையைக் கழத்தி வச்சான்; வேட்டிய மடிச்சுக் கட்டு னான். அப்பன் விட்ட இடத்துல இருந்து வாய்க்காச் செதுக்க ஆரம்பிச் சான்.

☆☆☆☆☆☆ (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் குருதி அழுக்கம்

உயர் குருதி அழுக்க நோயில் உள்ள முக்கியமான சிக்கல் என்னவென்றால் அதன் அறிகுறிகள் அவ்வளவாக வெளியில் தெரியாது. ஏனைய நோய்களைப் போல் இந்தப் பிரச்சினைக்கு சிறப்பான கண்டுபிடிக்கும் தன்மையுள்ள அறிகுறிகள் கிடையாது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் நீண்ட நாட்கள்வரை நோயின் தன்மையை அறியாமல் சாதாரணமாக




இருப்பார்கள். எனவேதான் இதை அமைதியான உயிர்கொல்லி நோய் என்றும் குறிப்பிடுகிறார்கள்.


பெரும்பாலும் இந்த நோயானது ஏதாவது மருத்துவப் பரிசோதனையின் போதே அல்லது வேலைக்கு ஆள் தேர்வு செய்யும் போது நடைபெறும் மருத்துவப் பரிசோதனைகளின் போதேதான் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்படுகிறது.

இருந்தாலும் சில சமயங்களில் தலைவலி, படபடப்பு, நெற்றிப்பொட்டு, எலும்புப் பகுதியில் உள்ள நாடிகள் துடித்தல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். ஆனால் இந்த அறிகுறிகளைக் கொண்டு உயர் குருதி அழுக்க நிலையை உறுதி செய்ய முடியாது.

**இந்த நோய் இருக்கிறது என்பதை எப்படி உறுதி செய்வது?**

இரத்த மிகு அழுத்த நிலையைக் கண்டுபிடிக்க மிகச் சிறந்த முறை, இரத்த அழுத்தக் கணக்கீடு கருவியைப் பயன்படுத்தி நேரிடையாக இரத்தத்தின் அழுத்தத்தை அளவிடுவதுதான். இது மிகவும் எளிமையான, சிறந்த, நம்பகமான முறையாகும்.

இந்த முறையால் இரத்த மிகு அழுத்த நோயைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து தக்க மருத்துவச் சிகிச்சைகளின் மூலமாகக் கட்டுப்படுத்தாவிட்டால் இதயத்தில் மட்டுமன்றி உடலில உள்ள முக்கியமான உறுப்புகளிலும் பலவகையான சிக்கல்கள் உருவாகக்கூடும். இரத்த அழுத்தத்தின் காரணமாக இதயத்தின் முடிவுருநாடிகள் தடித்துச் சுருங்குவதால் இதய வலி ஏற்படும். மேலும் இதயத் தசைகள் தங்களுடைய இயற்கையான வலுவை இழப்பதால் உடலுக்குத் தேவையான குருதியை இதயம் செலுத்த முடியாத நிலையில் இதயச் செயலின்மை நிலை ஏற்படுகிறது.




மேலும் தக்க மருத்துவ முறைகளின் மூலமாக உரிய நேரத்தில் உயர்குருதி அமுக்க நோயைக் கட்டுப்படுத்தாவிடின் மாரடைப்பு ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது. இன்னொரு கவலைக்குரிய அம்சம் என்னவெனில், உயர்குருதி அமுக்கத்தை முழுமையாகக் குணப்படுத்த முடியாது.

இதற்கு தக்க மருந்துகளைச் சாப்பிடுதல், உப்பைக் குறைத்துக்கொள்ளுதல், தக்க உடற்பயிற்சிகளைச் செய்தல், கொழுப்பு நிறைந்த உணவு வகைகளைத் தினசரி உணவில் கட்டுப்படுத்தல், அடிக்கடி இரத்த அழுத்த அளவைப் பரிசோதித்தல், மருத்துவரின் நேரடி ஆலோசனைகளை பெறுதல் ஆகிய முயற்சிகளின் மூலமாக உயர்குருதி அமுக்கம் உடலில் எந்த வகையான சிக்கல்களையும் ஏற்படுத்தாதவாறு, நோயின் தன்மையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளமுடியும்.




## கழுத்து வலி

கழுத்துவலி பெரும்பாலும் இளம் வயதினரையும் பாதிக்கிறது. இதற்கான காரணம் இன்றைய இளைஞர்களின் உணவுப் பழக்கவழக்கம் மற்றும் நவீன வாழ்க்கை முறை, மோட்டார் சைக்கிள், கார் போன்றவற்றில் மோசமான வீதியில் பயணம் செய்வது, அதிக நேரம் குனிந்து அமர்ந்து கம்பியூட்டர் டைப் செய்வது, எடையுள்ள பொருட்களை திடீரென தூக்குவது, உயரமான தலையணை வைத்து அதிக நேரம் படிப்பது, டிவி பார்ப்பது போன்ற செயல்களால் கழுத்து பகுதியில் சவ்வு பலவீனமடைந்து வலி ஏற்படுகிறது.




கழுத்துவலி வராமல் இருக்க உயரமான தலையணை, சமனில்லா படுக்கையை உபயோகப்படுத்தலை தவிர்த்தல் வேண்டும். இரு சக்கர வாகனங்கள், கார், ஆட்டோவில் நீண்ட தூர பயணங்களை தவிர்க்க வேண்டும். அதிக எடை தூக்குவதைத் தவிர்த்தல் நன்று. மருத்துவரின் ஆலோசனைப்படி சில உடற்பயிற்சிகள் செய்யலாம். இது கழுத்தை சுற்றியுள்ள தசைகளை பலப்படுத்தும்.

அதிக நேரம் ஒரே இடத்தில் குனிந்து வேலை செய்வதையும் தவிர்த்தல் சிறந்தது.

# இலங்கை துணை தூதரகத்தை இடமாற்றம் செய்யவில்லை

## *வெளிவிவகார அமைச்சு*

சென்னையில் இயங்கும் இலங்கை துணைத் தூதரகம் கேரளாவுக்கு இடமாற்றப்படாது என இலங்கை வெளிவிவகார அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இது குறித்த செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் அனைத்தும் வதந்திகளேயென்றும் அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரொட்டனி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் இலங்கை அரசுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இலங்கை துணைத் தூதரகத்திற்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து சென்னையில் உள்ள துணை தூதரகத்தை கேரள தலைநகர் திருவனந்தபுரத்துக்கு மாற்ற முடிவு செய்திருப்பதாகவே செய்திகள் வெளியாகியுள்ளன.

இச்செய்தி முற்றிலும் பொய்யெனக்கூறி மறுத்த ரொட்னி பெரேரா அவ்வாறு எந்த தீர்மானமும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் இலங்கைத் துணை தூதரகத்தை இடமாற்ற வேண்டிய அவசியம் இல்லையென்றும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# இந்தியா தனது கூற்றுக்களை பிரேரணையில் சேர்க்கவில்லை

## *பச்சை துரோகம் என்கிறார் டி.ராஜா*

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழர்களுக்கு மத்திய அரசு துரோகம் இழைத்து விட்டது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா கூறினார்.

வேலூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா.சபையில் இந்தியா உட்பட 25 நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

ஆனால் இலங்கைக்கு எதிராக இந்திய அரசு தீர்மானத்தில் திருத்தம் செய்யாமல் வாய்மொழியாக மட்டுமே சில கருத்துக்களை முன்வைத்தது.

எழுத்து பூர்வமாக திருத்தம் கொண்டு வர தமிழக அரசியல் கட்சிகளும் தமிழக அரசும் கோரிக்கை வைத்தபோதும் நாடாளு மன்றத்தில் இது தொடர்பாக குரல் எழுப்பிய போதும் மத்திய அரசு அதை கண்டு கொள்ளாமல் தமிழர்களுக்கு துரோகம் இழைத்து விட்டது.

தமிழகத்தில் எழுச்சி மிக்க போராட்டத்தை மாணவர்கள் நடத்தி சர்வதேச அளவில் இலங்கை பிரச்சினைக்கு வலிமை சேர்த்துள்ளனர்.

ஆனால் அவர்கள் தொடர்ந்து வீதியில் இறங்கிப் போராடுவது சாத்தியமாகுமா என யோசிக்க வேண்டும்.

இப்போராட்டத்தை ஒருமுகப்படுத்த மாணவர்கள் அடுத்தகட்ட யோசனை செய்ய வேண்டும். இப்பிரச்சினைக்கு தீக்குளிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது போராட்டத்துக்கு தீர்வாக அமையாது என்பதையும் மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழக அரசியல் கட்சிகள் மத்திய அரசிடம் கருத்து ரீதியாக, அரசியல் ரீதியாக போராட வேண்டும்.

இலங்கை மீது இந்தியாவே தீர்மானம் முன்மொழிந்திருந்தால் அந்தத் தீர்மானம் மிக வலிமையாக இருந்திருக்கும் என்றார். (அ-2)

# இரட்டை குடியுரிமை குழு தலைவராக கோத்தா

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை வழங்குவதற்கான குழுவின் தலைவராக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார்.

அரசாங்கத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் அத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது தற்காலிகமாக இரட்டை குடியுரிமை வழங்கல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சட்ட திருத்தங்களின் பின்னர் இந்த நடைமுறை மீண்டும் அமுலாக்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையில் இரட்டை குடியுரிமைக்கு விண்ணப்பிப்பவர்களை நேர்முக தெரிவுக்குட்படுத்தி குடியுரிமையை இறுதி செய்யும் குழுவின் தலைவராக கோத்தபாய ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# இலங்கையுடனான உறவில் விரிசல் இல்லை

## *கனடாவின் சிறப்பு தூதுவர்*

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசுடனான உறவில் இன்னும் விரிசல் ஏற்படவில்லை என்று கனடாவின் சிறப்பு தூதுவர் ஹுக்சேகல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். ஷிராணி பண்டாரநாயக்கவின் பதவி விலகல் மற்றும் பொதுநலவாய பெறுமதிகள் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் மிகவும் ஆத்திரமடைந்த நிலையில் ஜி.எல்.பீரிஸ் ஹுக் சேகலுடன் வாக்குவாதம் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த விடயம் தமக்கு வருத்தத்தையோ அதிர்ச்சியையோ வழங்கவில்லை என்றும் ஹுக்தெரிவித்துள்ளார். (அ-2)

# அமர்வுகளில் பங்கேற்குமாறு உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு

## *விருந்தோம்பல் பண்பு என்கிறார் பீரிஸ்*

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்குமாறு உறுப்பு நாடுகளை கோருவதனைத் தவிர வேறும் எதுவும் செய்ய முடியாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை விருந்தோம்பல் பண்புகள் உயரிய நாடு எனவும் இந்தப் பண்பு தொடர்ந்து பேணிப் பாதுகாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்களது பங்கிற்கு சகல ஏற்பாடுகளையும் செய்து அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்க முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமர்வுகளில் கலந்து கொள்வதா இல்லையா என்பதனை உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டும்.

பொது நலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் மாநாடு மிகவும் சிறந்த முறையில் நடைபெறும் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வட்டாரங்களை பிரிக்கும் பணிகள் மே.31 இற்குள் பூர்த்தியாகும்

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை தேர்தல் வட்டாரங்களாகப் பிரிக்கும் பணிகள் யாவும் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என உள்ளூராட்சி மன்றங்களை தேர்தல் வட்டாரங்களாகப் பிரிப்பதற்கான தேசியக் குழு உறுப்பினர் ஏ.எம்.நஹ்றயா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களை வட்டாரங்களாகப் பிரிப்பது குறித்த பணிகள் மாவட்ட மட்டத்தில் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தேசியக்குழுவின் உறுப்பினர்கள் மாவட்ட மட்டத்தில் நேரில் சென்று மாவட்ட மட்டக்குழுக்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்றங்களை தேர்தல் வட்டாரங்களாகப் பிரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களை தேர்தல் வட்டாரங்களாகப் பிரிப்பதற்கான தேசியக்குழு தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சின் முன்னாள் செயலாளர் ரவி திஸாநாயக்க தலைமையில் ஐவரை உள்ளடக்கி கடந்த டிசெம்பர் மாதம் அமைக்கப்பட்டது.

இதனடிப்படையில் எமது பணிகளை கடந்த ஜனவரிமாதம் ஆரம்பித்தோம்.

இதனடிப்படையில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு நேரில் சென்று உள்ளூராட்சி மன்றங்களை தேர்தல் வட்டாரங்களாகப் பிரிப்பது தொடர்பான கூட்டங்கள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன.

இப்பணிகள் நிறைவுற்றதும் அது தொடர்பான அறிக்கை உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவிடம் கையளிக்கப்படும்.

அவ்வறிக்கையை அமைச்சர் பரிசீலனை செய்து ஜனாதிபதியிடம் கையளிப்பார். அதன் பின்னர் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். இதனடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் புதிய சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடைபெறும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# 35,000 ரூபாவுக்கு சிசு விற்பனை

(கொழும்பு)


மூன்று நாள் சிசுவொன்றை 35 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்த பெற்றோர் மற்றும் தரகர் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிசுவை விற்பனை செய்த தாய், தந்தை மற்றும் தரகராக செயற்பட்ட பெண் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

புசல்லாவை பிரதேச வைத்தியசாலையொன்றில் இந்த சிசு பிரசவிக்கப்பட்டதாகவும் நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்தச் சிசுவை 35 ஆயிரம் ரூபாவிற்கு வாங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# அமெரிக்காவுடனான உறவில் விரிசல் ஏற்படுத்த வேண்டாம்

*அமைச்சர் மேர்வின் அட்வைஸ்*



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். களனியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நாம் எவருடனும் கோபம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அமெரிக்காவுடனான உறவுகளை தொடர்ந்தும் பேண வேண்டும். கடுகளவேனும் உறவுகளில் விரிசலை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. இந்தியாவைச் சேர்ந்த சில மிலேச்சர்களின் நடவடிக்கைகள் காரணமாக அந்நாட்டுடனான உறவுகளை துண்டிக்க வேண்டியதில்லை. ராஜீவ் காந்தியை கொலை செய்தவர்கள் போராட்டம் நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றால் இந்தியர்களின் ஆடைகளையே களைய வேண்டும். இந்தியாவை நாம் நேசிக்கின்றோம் என்றார். இதேவேளை, களனியிலிருந்து தம்மை விரட்டியடிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்த விசேட பரிந்துரைகள் நடைமுறைக்கு

*அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு*

சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்துவதற்கான உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச காசநோய் எதிர்ப்புத் தினம் கடந்த வெள்ளிக்கிழமை கேகாலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இக் கருத்தினை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்ப காலகட்டத்தில் ரஜரட்ட பகுதியில் மாத்திரம் காணப்பட்ட சிறு நீரக நோயானது. தற்பொழுது நாடு முழுவதும் பரவக் கூடிய நிலை காணப்படுகிறது. அத்துடன் அதனை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர வேண்டியுள்ளதாகவும் உள்ளது.

சிறுநீரக நோயினை கட்டுப்ப்டுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதார அமைச்சருக்கு பரிந்துரைத்துள்ள விடயங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்படும். காநோய் உட்பட்ட பல நோய்களை நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். ஆனால், வர்த்தக பொருளாதாரத்தின்படி நம் நாட்டுக்குள் பல்வேறுபட்ட நோய்கள் உட்புகுவதற்கு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. சிறுநீரக நோயானது நாட்டில் துரிதமாக பரவி வருவதாக சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நோய்கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதற்குத் தேவையான விடயங்களை ஆலோசிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் தேவையான விடயங்களை அமைச்சரவைக்கு முன்வைத்துள்ளேன்.

பல அமைச்சுக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உப குழு ஒன்றும் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. இந்த உப குழுவின் மூலம் பரிந்துரைக்கப்படும் திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும். அரசாங்கம் இந்த நாட்டின் இலவச சுகாதார துறைக்காக 125 பில்லியன் ரூபாய் செலவிடுகிறது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஒவ்வொரு நோயாளிக்கும் தலா இரண்டாயிரம் தொடக்கம் பத்தாயிரம் வரை தினமும் செலவாகின்றது.

புற்று நோயாளி ஒருவருக்கு 150 இலட்சம் ரூபா வரை அரசாங்கத்தினால் செலவு செய்யப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தினை சம்பந்தப்பட்ட நோயாளியோ அல்லது ஏனைய நபர்களோ அறிந்து கொள்வதில்லை என்றார். (அ-2)

# உலகம் போற்றும் ஒப்பற்ற மகரிஷி!

ஈழ நல்லூர் அவதார புருஷர் வெள்ளை அண்ணை சுவாமிகள் எனும் இராமச்சந்திர மகரிஷியின் அஸ்தியில் எழுந்த கொழும்புத்துறை தையல்நாயகி சமேத ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஷ்வரர் திருத்தலத்தில் எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி பங்குனி உத்தர தினத்தின் போது நடைபெறவுள்ள சங்காபிஷேகத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

வட இலங்கை யாழ்ப்பாணத்து நல்லூரின் வடதிசையில் கலைமகள் வீதியில் அமைந்துள்ள சபாமாளிகை என்னும் பேரில்லத்தில் 29.05.1926 ஆம் ஆண்டு மூல நட்சத்திரத்துடன் கூடிய புண்ணிய தினத்தில் திரு அவதாரம் புரிந்தவரே இராமச்சந்திர மகரிஷி.

அனைத்து உறவுகளையும் சகோதர உறவாக அரவணைத்து குருவாக உபதேசத்து நின்ற எம்பெருமானை இனம்,மொழி,மத வேற்றுமை நீங்க அனைத்து சமூக உறவுகளும் வெள்ளை அண்ணை என பாசமுடன் அழைத்து வரலாயினர்.

இலங்கையின் தேசிய ஒற்றுமைக்கு உழைத்த தமிழ்த் தலைவரான சேர். பொன்னம்பலம் இராமநாதனின் அந்தரங்க செயலாளராக இருந்த ஆசார சீலரான நல்லூர் கலாநிதி சபாபதி முதலியார் சங்கரப்பிள்ளையை தமது பூலோகத்தந்தையர் ஆக எம்பெருமான் ஏற்றார். தாயாரோ ஆசார அனுட்டானத்துடன் தரும காரியங்களில் ஈடுபட்டு அவ்வூரில் வாழ்ந்த அவர்களது உறவினரான மீனாட்சி அம்மாவாவார்.

எம்பெருமான் தோன்றி உபதேசித்து நின்ற 20 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியானது ஆன்மீகப் பணிக்கு மிகவும் சோதனை நிறைந்த காலமாகும்.

இடர் மலிந்த அக்காலப் பகுதியில் வருகை புரிந்த எம்பிரான் ஆஸ்திகவாதிகளும் நாஸ்திகவாதிகளும் மெய்யன்போடு வணங்கி நிற்க, தமது அறிவியல் கலந்த ஆன்மீக உபதேசங்களால் அனைவரையும் நெறிப்படுத்தினார்.

உலகின் அனைத்து மொழிகளையும் துறைபோகக் கற்று ஆரியம் திராவிடம் என்ற பேதமை களைந்து அனைத்து மொழிகளையும் ஒரு மொழி என வகுத்தார்.

அவ்வாறாய் உலக சமுதாயத்தை ஒரு குடும்பமாக்கி சங்கத் தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார் கூறியது போல உலகின் அனைத்து ஊரும் எமது ஊரே. அங்கே வாழும் அனைத்து மக்களும் எமது உறவினரே (யாதும் ஊரே: யாவரும் கேளிர்) என்ற புறநானூற்று வார்த்தைகளை தமது அற்புத அறிவாற்றலால் நிரூபித்து உலக சமுதாயத்தை வாழ்விக்க வந்த ஒப்பற்ற அவதார புருஷராய் ஒளிவீசினார்.

தமிழ் மந்திரம் எனும் திருமந்திரம் தந்த திருமூல முனிவர் உரைத்த **ஒன்றே குலம்!, ஒருவனே தேவன்** என்ற வார்த்தைக்கும் **என்னை இறைவன் நன்கு படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே** என்ற வார்த்தைக்கும் வடிவம் கொடுத்த பெரும் மகரிஷி அவரே.

இவ்வாறு தமிழர் உள்ளிட்ட உலக சமுதாய ஒருங்கிணைப்பிற்குப் பிள்ளையார் சுழி இட்ட பெம்மானார் ஒரு நைஷ்டிகப் பிரமச்சாரி. நல்லூரிலே எளிமை வாழ்வேற்ற எம்பிரான் தம்மை நாடிவந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு வகை செய்தாராய் மொழி, கணிதம், விஞ்ஞானம்,கலை என அனைத்துத்துறையினிலும் எளிய முறையிலே பாட போதனை புரிந்தாராய் ஊரவர் கல்விக் கண் திறந்து, வறிய பிள்ளைகளுக்கு பாடநூல்கள், கல்வி உபகரணங்களை இலவசமாக வழங்கி அவர்களது கல்வி அறிவு தங்கு தடையின்றித் தொடர வகை செய்தார்.

நலிந்த மக்களின் நல்வாழ்வுக்காக உணவு, உடை, உறையுள், மருத்துவ உதவிகளை கருணை உள்ளத்தோடு வழங்கியும் அருள் பாலித்தும் நின்ற பெருவள்ளலார் அவராவார். தம்மை நாடி வந்தோருக்கு சமய தீட்சையும் செய்து நின்ற அந்தணோத்தமர் அவரே.

அத்தகைய எம்பிரானது அற்புத ஆற்றல்களால் கவரப் பெற்ற பலர் தேமை நீங்கி எம்பிரானே தஞ்சம் என அவர்தம் திருவடியைப் பாடிப் பரவினர்.

எம்பெருமான் பெருமையால் உந்தப் பெற்றவர்கள் தமது தனிப்பட்ட சர்ச்சைகளை மூட்டைகட்டி எறிந்துவிட்டு அவர்தம் உபதேசங்களால் தமது பிறப்பின் நோக்கத்தைப் புரிந்து எம்பெருமான் அருள்வாக்கிற்காக ஏங்கி நின்றனர்.

இன,மத,மொழி கடந்து கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த சிங்கள ஆன்மீக வாதிகள், பேரறிஞர்கள்,அவ்வச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பேரன்புடன் வணங்கி நிற்கவே அவர்களது ஆன்ம ஈடேற்றத்திற்கும் வகை செய்த மகாஞானி அவராவார். மொத்தத்தில் ஒரு ஆன்மீக அரசாங்கமாக, ஐக்கிய நாடுகள் சபையாக எம்பெருமான் வெள்ளை அண்ணை சுவாமிகளின் சமுதாயத்தோடு ஒட்டிய உயர்பணிகள் அன்று அமைந்திருந்ததை கேள்வியுறும் இன்றைய உலக சமுதாயம் அப்படி ஒருவர் வாழ்ந்தாரா என வியப்பிலாழ்ந்து நிற்கின்றது.

ஈழத்தின் யோகர்சுவாமிகள் முதலான சித்தர்களுடன் தமிழ் நாட்டைச் சேர்ந்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், குன்றக்குடி அடிகளார்,சுத்தானந்த பாரதியார்,நவநீத கிருஷ்ண பாரதியார் முதலான ஆன்மீக வாதிகளினதும் பேரன்புக்குப் பாத்திரமாய் ஓர் அவதார புருஷராகப் போற்றப் பெற்ற பெம்மான் அவராவார்.

அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படியாக உலகினை ஒரு குடும்பமாக்கி சமரச சிவவழிபாட்டினை உலகிற்கு அளித்த எம்பிரான் தாம் இந்தப் பூவுலகிற்கு வந்த காலம் போதும் என்றாகவே 1977 பங்குனி உத்தரதினத்திலே ஜோதியில் கலந்தார்.

உலகம் எங்கும் பரவியுள்ள எம்பெருமான் சீடர்கள் பங்குனி உத்தர தினத்திலே தியானம் புரிந்து உலகம் இன்புற்று வாழப் பிரார்த்தித்து வருகின்றனர்.


கனடா வானொ லியில் எம்பெருமான் புண்ணிய தினத்திலே ஆன்மீகச் சொற்பொழிவுகள் காற்றிலே கல ந்துஅனைத்து ஆன்மாக்களையும் வருடி மகிழ்விப்பது மேற்குலகிலே வாழும் எம்பெருமான் பக்த கோடிகளின் உளத்தைக் களிப்பாக்கும் பேரானந்தம் ஊட்டும் இனிய அனுபவமாகும்.

***இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!***

**அருட்சீடர் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி மகரிஷி ஆன்மீக ஸபா, நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் வருமுன் அணை கட்டுமா இலங்கை?



விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது போர்க்குற்றங்கள் எதுவும் நிகழவில்லை என்றும், அது தொடர்பான எந்த விசாரணைக்கும் அரசாங்கம் பயப்படத் தேவையில்லை என்றும் உசுப்பேற்றி விட்டுள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. போர்க்குற்றங்களை மறுப்பதைவிட, வெளிப்படையான விசாரணை ஒன்றுக்கு முகம் கொடுப்பதை அவர் வரவேற்பதாகவே தெரிகிறது. ஆனால், அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

ஏனென்றால் போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து வெளியான எல்லாப் படங்களையும் வீடியோக்களையும் பொய்யானது, போலியானது என்று உறுதிப்படுத்த முடியாது என்பது அரசாங்கத்துக்கு நன்றாகவே தெரியும். படங்கள் பொய்யானவை, சோடிக்கப்பட்டவை என்று மறுப்பறிக்கை வெளியிடுவது சுலபமானது. அதை நிரூபிப்பது மிக மிகக் கடினமானது. சரத் பொன்சேகா சொல்வதை நம்பி, வெளிப்படையான விசாரணைக்கு முகம் கொடுப்பது எந்தளவுக்கு ஆபத்தானது என்பதை அரசாங்கம் நன்றாகவே அறியும்.

சரத் பொன்சேகா அமெரிக்கா சென்றிருந்தபோது போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் விசாரிக்கப்பட்டதன் அடிப்படையில் வொசிங்டன் சென்ற பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவிடமும் கேள்விகள் எழுப்பப்பட்டன. அதுவே, சரத் பொன்சேகா மீது அரசாங்கம் நம்பிக்கையிழந்து போய் அவருடன் மோதுவதற்குக் காரணமாகியது. எந்த விசாரணைக்கும் தான் தயார் என்று சரத் பொன்சேகா கூறினாலும் போரின் கடைசி வாரத்தில் அவர் சீனாவில் தங்கியிருந்தது. குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் தப்பித்துக் கொள்வதற்கு கூடுதல் வாய்ப்புகளை அளிக்கலாம். எனவேதான், அரசாங்கம் சரத்பொன்சேகாவின் பேச்சை நம்பி, எந்த வெளிப்படையான விசாரணைகளுக்கும் முகம்கொடுக்கத் தயாராக இல்லை.

இப்போதுகூட அவர், வெளிப்படையான விசாரணைக்கு இணங்குமாறு கூறி, அரசாங்கத்தைப் பொறிக்குள் தள்ளிவிட முனைகிறாரா என்ற சந்தேகம் அரச தரப்பிடம் உள்ளது. அதுமட்டுமன்றி பாலச்சந்திரனை இராணுவத்தினர் கொல்லவில்லை என்று அவர் கூறியுள்ளதுடன். சனல்4 வெளியிட்ட பாலச்சந்திரனின் படத்தில் காணப்படும் இராணுவச் சீருடை இலங்கை இராணுவத்தினர் அணிவதை ஒத்தது அல்ல என்றும் இந்திய இராணுவ சீருடையை ஒத்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப்புலிகள் கடைசி நேரத்தில் இந்திய இராணுவத்தினருடைய் சீருடையை அணிந்து போரிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். இராணுவப் பதுங்குகுழி ஒருபோதும் சுத்தமாக இருக்காது என்பதால் அது தமது படையினருடையவை அல்ல என்றும் அவர் வாதிட்டுள்ளார். ஆனால், சரத்பொன்சேகா குறிப்பிட்டது போல, இந்திய இராணுவ சீருடையுடன் விடுதலைப்புலிகள் போரிட்ட விவகாரம் இந்த நான்கு ஆண்டுகளில் முன்னெப்போதும் வெளிவரவேயில்லை.

விடுதலைப்புலிகள் சீருடை அணியாமல் சிவில் உடையில் போரிட்டதாகவே இராணுவத்தரப்பும் அரசாங்கத் தரப்பும் கூறியிருந்தன. இதனால் விடுதலைப்புலிகளையும் பொதுமக்களையும் பிரித்து அறிவதில் சிக்கல் இருந்ததாக அரசாங்கமும் சரத் பொன்சேகாவும் கூட முன்னர் கூறியது நினைவில் இருக்கலாம். அத்துடன் படையினரால் கைப்பற்றப்பட்ட ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகளின் சடலங்களில் இந்திய இராணுவ சீருடை காணப்பட்டிருக்கவும் இல்லை. அது மட்டுமல்லாமல் இன்னொரு சர்ச்சைக்கும் சரத் பொன்சேகா வித்திட்டுள்ளார்.

அதாவது, வி.பு.தலைவர் பிரபாகரன் அவர்களின் மனைவி மதிவதனி, மகள் துவாரகா, இளைய மகன் பாலச்சந்திரன் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றே அரசாங்கத் தரப்பு கூறிவந்துள்ளது. ஆனால், திடீரென சரத் பொன்சேகா, அவர்களின் உடல்கள் பிரபாகரன் கொல்லப்பட்ட மறுநாள் அதாவது மே 20 ஆம் திகதி நந்திக்கடல் பகுதியில்- தலையில் சுடப்பட்ட காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டதாக கடந்தவாரம் வெளிநாட்டு செய்தியாளர்கள் சங்கத்தில் நடந்த சந்திப்பில் கூறியுள்ளார். 150 விடுதலைப்புலிகளின் உடல்களுடன் அவற்றையும் மீட்டதாக சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள தகவல் இந்த நான்கு ஆண்டுகளில் வெளியே கூறப்படாத ஒரு இரகசியம். அவ்வாறாயின் இந்த உண்மையை சரத் பொன்சேகாவோ அரசாங்கமோஏன்இதுவரை வெளிப்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது. சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள இந்தத் தகவல் ஒன்றே போரின்போது நடந்த சம்பவங்கள்குறித்தபலஉண்மைகள் இன்னமும் வெளிவராதுள்ளனஎன்பதற்குசாட்சியாக உள்ளது. இந்தநிலையில் நம்பகமான விசாரணை ஒன்றின்மூலம் உண்மைகளைக் கண்டறிய இனிமேலும் தவறினால் இன்னும் பல இரகசியங்கள் வெளிவருவதுடன் மட்டும் நின்றுவிடாது. அடுத்தடுத்த கட்டங்களில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை என்ற தீர்மானம்கூட இலங்கையின் கழுத்தை நெரிக்கலாம்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உண்மை கண்டறியும் விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை கடந்தவாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

முன்னதாக இந்த உண்மை கண்டறியும் பொறிமுறை சர்வதேசத் தலையீட்டை வலியுறுத்தியதாக அமைக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் அது வலுவிழந்து உள்நாட்டு பொறிமுறையாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள போதிலும் இதனை ஏற்று நடக்க வேண்டிய கட்டாயம் ஒன்று உருவாக்கப்படும்.

கடந்த ஆண்டும் இது போன்றுதான் இலங்கைஅமெரிக்காகொண்டுவந்துநிறைவேற்றிய தீர்மானத்தை நிராகரிப்பதாக பகிரங்க அறிக்கையெல்லாம் விடுத்தது. ஆனால், அந்தத் தீர்மானத்துக்கு அமைய சில வேலைத் திட்டங்களையேனும் செய்ய வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டது. குறிப்பாக 2012 மார்ச் தீர்மானத்துக்குப் பின்னர் அமெரிக்கா கொடுத்த அழுத்தங்களின் பின்னர்தான் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டத்தை இலங்கை வகுத்தது. அதைவிட சில குறிப்பிட்ட விடயங்களில் சர்வதேச சமூகம் இலங்கை மீது திருப்தியை வெளியிட்டுள்ளது என்றால் அதற்கும் காரணம் அந்தத் தீர்மானம்தான். ஜெனீவாவில் 2012 இல் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தத்தவறியுள்ளபோதிலும் அதனை முற்றிலும் நிராகரித்துவிட்டதாகக் கூறமுடியாது. அதுபோலவேதான் இம்முறை நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தையும் இலங்கை அரசாங்கம் முற்றிலும் உதாசீனப்படுத்த முடியாது. ஏதோ ஒரு கட்டத்தில் இலங்கை அரசாங்கம் குறிப்பிட்ட சில விடயங்களை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் எழும் என்பதில் சந்தேகமில்லை.

ஜெனீவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஒரு சில மணிநேரங்களுக்குள் இலங்கை தனது பொறுப்புகளை தட்டிக்கழிக்காமல் நிறைவேற்ற வேண்டும் என்று அழுத்திப் பிடிக்கத் தொடங்கிவிட்டார் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன்கெரி. இதன் மூலம் கிலாரி கிளின்டன் காலத்து அணுகுமுறையில் இருந்து தான் மாறப்போவதில்லை. என்பதை அவர் முதல்முறையாக வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக பொறுப்புக்கூறுதல் விவகாரத்தில் இலங்கை உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது என்பதையே ஜெனீவா தீர்மானம் உணர்த்தி நிற்கிறது. ஏனென்றால் இந்தியாகூட உலகம் ஏற்கக்கூடிய நம்பகமான சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று கோரும் நிலைக்கு வந்துள்ளது.

இது பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கையின் நிலை சர்வதேச அரங்கில் பலவீனப்பட்டுவிட்டது என்பதை வெளிக்காட்டுகிறது. முன்னர் ஜெனீவாவிலும் கடைசியாக பிரான்சிலும தூதுவராகப் பணியாற்றிய இலங்கையின் மூத்த இராஜதந்திரியான தயான் ஜெயதிலக இலங்கை சர்வதேச ஆதரவை இழந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். கடந்தமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் இது இலங்கைக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் என்று இவர் கூறிய கருத்து இலங்கை அரசாங்கத்தை கடுமையாக வெறுப்படைய வைத்தது. அதன் விளைவாகவே அவர் இராஜதந்திர சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படும் நிலை ஏற்பட்டது. கடந்த முறை இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு எதிராக 15 நாடுகள் வாக்களித்த போதிலும் இம்முறை அது 13 ஆக குறைந்துள்ளதை தயான் ஜெயதிலக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனீவாத் தீர்மானத்தை எதிர்த்து மற்றும் வாக்களிக்காமல் தவிர்த்த, பாகிஸ்தான், ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கைக்கு இன்னமும் கால அவகாசம் வழங்குமாறுதான் கோரியுள்ளனவே தவிர, இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய் என்று நிராகரிக்கவில்லை. தற்போதைய தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்துகிறதா என்பது குறித்து 24 ஆவது அமர்வில் அதாவது வரும் செப்ரம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வாய்மொழியிலான அறிக்கை ஒன்றை சமர்பிக்க வேண்டும். அதையடுத்து அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள 25 ஆவது கூட்டத் தொடரில் முழுமையான அறிக்கையை அவர் சமர்பிக்க வேண்டும் என்று தீர்மானம் கோரியுள்ளது. எனவே, ஜெனீவா காய்ச்சல் என்பது இலங்கை அரசாங்கத்தை விட்டு இப்போதைக்குப போகப்போவதில்லை.

அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தை இலங்கை முற்றிலுமாகப் புறக்கணித்து நடக்க முடியாது. குறிப்பாக, நம்பகமான சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை இலங்கை உருவாக்க வேண்டிய கட்டாய நிலை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த கடந்த ஆண்டு இராணுவ விசாரணை நீதிமன்றத்தை அரசாங்கம் உருவாக்கியது. அந்த விசாரணை நீதிமன்றம் அளித்த அறிக்கையை யாரும் கையில் எடுக்கக்கூட இல்லை. அதுபோன்ற ஒரு உள்ளக விசாரணைப் பொறிமுறையை மீண்டும் உருவாக்க அரசாங்கம் முற்படலாம். எனினும் அதனை உலகம் ஏற்றுக் கொள்ளாது.

எவ்வாறாயினும் இதுவரை சுதந்திரமான நம்பகமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க இலங்கை அரசாங்கம் இணங்கியதில்லை. சுதந்திரமான வெளியக விசாரணைப்பொறிமுறையை அறவே நிராகரித்த இலங்கை உள்ளக விசாரணையை நம்பகமான முறையில் மேற்கொண்டிருந்தால் ஓரளவுக்கேனும் சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பித்திருக்கலாம். குறிப்பாக நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்ததுதான், சர்வதேச அரங்கில் இலங்கை இன்று காப்பாற்றப்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

நல்லிணக்க ஆணைக்குழு முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளாது போனாலும் பல முக்கிய விடயங்கள் குறித்த அது கவனத்தில் எடுக்காதது சர்வதேச சமூகத்துக்கு அதிப்தியை ஏற்படுத்திய போதிலும் இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்கான குறைந்தபட்ச அணுகுமுறையாக அது எடுத்துக்கொள்ளப்பட்டது. அதாவது இலங்கையை அதன் கையாலேயே அடிப்பதற்குத்தான், சர்வதேச சமூகம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. இல்லாவிட்டால் இலங்கையைத் தமது பிடிக்குள் வைத்திருக்க முடியாது என்பது சர்வதேசத்தினது கருத்து. அதுபோலவே, குறைந்தபட்சம் நம்பகமான ஒரு விசாரணைப் பொறிமுறையேனும் இலங்கை இம்முறை உருவாக்க முற்படலாம். ஏனென்றால் முற்றிலும் இந்தக் கோரிக்கை புறக்கணிக்கப்படுவது, இலங்கைக்கான சர்வதேச ஆதரவை முற்றிலுமே இல்லாமல் செய்துவிடும். அதைவிட தீர்மானம் அடுத்தடுத்த அமர்வுகளில் கொண்டு வரப்பட்டு சர்வதேச விசாரணைப்பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவும் வாய்ப்புகள் உள்ளன. எனவே ஜெனீவா தீர்மானத்தை இலங்கை நிராகரித்தாலும் வெள்ளம் வருமுன்னர் அணை கட்டவே இலங்கை முற்படக்கூடும். அது பலமான அணையா- பலவீனமான அணையா என்பதை இலங்கையே தீர்மானிக்க வேண்டும்.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4500 ஆண்டுகளுக்கு முன்னர் மலையகத்தில் மனித இனம்

(கொழும்பு)

மலையக பகுதிகளில் 4 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முற்பட்ட மனித இனம் வாழ்ந்து வந்துள்ளதாக புராதன ஆய்வு திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஹப்புத்தளை, ஹல்தமுல்லை, பெரகல ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் 4 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னரே அங்கு மனித இனம் வாழ்ந்தமைக்கான சாட்சியங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்கள், ஆயுதங்கள் போன்றன இந்த பகுதிகளில் மீட்கப்பட்டன. அத்துடன் பல்வேறு கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (அ-2)

# அரசியல் ஆதிக்கத்திற்கு பலிக்கடா பாலச்சந்திரனா?

## இந்திய ஆங்கில ஊடகங்கள் விசனம்

இலங்கை விடயத்தை வலியுறுத்தி தற்போது தமிழகத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் சுவரொட்டி யுத்தம் ஒன்று இடம்பெற்று வருவதாக இந்திய ஆங்கில ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அரசியல் கட்சிகளும் அரசியல் சார்ந்த குழுக்களும் குறித்த சுவரொட்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன. குறித்த சுவரொட்டிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் புகைப்படம் வரையப்பட்டுள்ளது. இது தமிழக அரசியல்வாதிகள் தமது அரசியல் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும் என்று குறித்த ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-2)

# அந்தோனியாரை வைத்திருந்த கண்ணாடி பேழை உடைப்பு

## விசமிகள் கைவரிசை

(மன்னார்)

மன்னார் சாவற்கட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் அந்தோனியார் சொரூபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப்பேழை இனந்தெரியாதோரினால் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆலயத்தினுள் மனித மலம் வீசப்பட்டுக் காணப்பட்டதாகவும் மன்னார் செபஸ்தியார் பேராலயத்தின் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரன் தவராஜ் தெரிவித்துள்ளார்.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் நேற்று முன்தினம் குறித்த ஆலயத்திற்கு வந்த இனந்தெரியாத நபர்கள் சிலர் அந்தோனியார் சொரூபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப்பேழையை சேதப்படுத்தியுள்ளதுடன் இங்கிருந்த சில பொருட்களையும் இழுத்து கீழே வீசியுள்ளனர்.

மேலும் இந்த ஆலயத்தினுள் மனித மலமும் வீசப்பட்டுக் காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆலயத்திற்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வந்த மக்கள் இதனைக் கண்டு தமக்கு தெரியப்படுத்தினர் என்றும் இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தாம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)

# எரிபொருள் களஞ்சிய தீ விபத்து குறித்து விசாரணை

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உறுகொடவத்தை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள களஞ்சிய சாலையில் திடீர் தீ விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மின்னல் தாக்கம் காரணமாக நேற்று முன்தினம் மாலை அங்குள்ள இரண்டாவது தாங்கியில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகின்றது.

எனினும் இது எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக எரிபொருள் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடைசியாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் படி அங்கு ஏற்பட்ட தீப்பரவலுக்கு அங்கு பொருத்தப்பட்டுள்ள இடிதாங்கியில் ஏற்பட்ட பாதிப்பே காரணம் என்று அதன் பணிப்பாளர் சுசந்தசில்வா தெரிவித்துள்ளார். (அ-2)

# நவநீதம்பிள்ளை இலங்கை வரார்

## சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை இலங்கைக்கு விஜயம் செய்ய மாட்டார் என பிரபல சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மனித உரிமைப் பேரவையின் சகல கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் வரையில் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார். இலங்கை நிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு நவநீதம்பிள்ளையிடம் இந்தியா கோரியுள்ளது.

எனினும் விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் இலங்கைக்கு விஜயம் செய்யப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார் என அப்பத்திரிகைகள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (அ-2)

# மது அருந்தும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஆய்வில் தகவல்

நாட்டில் யுத்தம் முடிவுற்ற பின்னர் இலங்கையில் மது அருந்தும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக புதிதாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது இலங்கையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் மது அருந்தும் பழக்கத்துக்கு உட்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரை பொறுத்தவரையில் வேலைக்கு போகும் பெண்களும் பல்கலைக் கழகத்தில் உள்ள பெண்களும் அதிக அளவில் மது அருந்தும் பழக்கத்துக்கு உட்பட்டுள்ளதாக இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பெரும்பாலானவர்கள் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரே இந்த பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். (அ-2)




★1199-லண்டன் மன்னன் முதலாம் ரிச்சார்ட் பிரான்சை முற்றுகையிடும் போது படுகாயமடைந்தான். இதனால் 11 நாட்களின் பின்னர் இறந்தான்.

★1431- பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆரம்பமானது.

★1552-குரு அமர்தாஸ் சீக்கியரின் மூன்றாவது மதகுருவானார்.

★1812-வெனிசுவேலாவின் கரக்காஸ் நகர் நிலநடுக்கத்தில் அழிந்தது.

★1871-இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. 2,405,287 பேர் பதிவாகினர்.

★1872-கலிபோர்னியாவில் லோன் பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.

★1917-முதலாவது உலகப் போர்: காசாப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது சமரில் பிரித்தானியப் படைகளின் முன்னேற்ற நடவடிக்கை சுமார் 17 ஆயிரம் துருக்கியர்களால் தடுக்கப்பட்டது.

★1934- ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.

★1942-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் முதற் தடவையாக பெண்கள் சிறைக்கைதிகளாகினர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானுடனான இவோ ஜீமா போர் முடிபுக்கு வந்ததாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்தது.

★1953-ஜொனாஸ் சால்க் தனது போலியோ தடுப்பூசியை அறிமுகப்படுத்தினார்.

★1958-ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவினர்.

★1971-கிழக்கு பாகிஸ்தான் பாகிஸ்தானிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. வங்காளதேச விடுதலைப் போர் ஆரம்பமானது.

★1979-இஸ்ரேல்- எகிப்து அமைதி ஒப்பந்தம் வோஷிங்டனில் கைச்சாத்தானது.

★1997-சுவர்க்கத்தின் வாயில் என்ற மதக் குழுவில் தற்கொலை செய்து கொண்ட 39 பேரின் உடல்கள் கலிபோர்னியாவில் கண்டெடுக்கப்பட்டன.

★1998-அல்ஜீரியாவில் 2 அகவைக்குட்பட்ட 32 குழந்தைகள் உட்பட 52 பேர் கத்திகளாலும் வாள்களாலும் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

★2000- விளாடிமீர் பூட்டின் ரஷ்யாவின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

★2006-மியன்மாரின் புதிய தலைநகராக நாய்பிடோ என்ற புதிய நகரம் இராணுவ ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது.

★2006-முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.

### பிறப்புகள்

★1874- ரொபேட்ஃபுறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (இ.1963)

★1913-பேர்ல் ஏர்டோசு, அங்கேரிய கணிதவியலாளர் (இ.1996)

★1916-கிறிஸ்ரியன் ஆன்பின்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1995)

★1938-அன்ரனி லெகெட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★1940-நான்சி பெலோசி, அமெரிக்க அரசியல்வாதி

★1941-ரிச்சர்ட் டாக்கின்ஸ், படிவளர்ச்சி உயிரியலாளர்

★1951-கார்ல் வைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★1962-ஜான் ஸ்டாக்டன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்

★1827-லுடுவீக் ஃவான் பேத்தோவன், ஜேர்மனி மேற்கத்தேய செவ்விசை இயற்றுநர் (பி.1770)

★1892- வால்ட் விட்மான், அமெரிக்கக் கவிஞர் (பி.1819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதி

(நேற்றைய தொடர்ச்சி...)

இவ்வாறு செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மீளப்பெறப்படும் சந்தர்ப்பங்கள்

I.K படிவம் மூலம் மீளப்பெறல்

1. பெண்களாயின் 50 வயது பூர்ணமாகி பணியிலிருந்து ஓய்வு பெற்றிருப்பின் ஆண்களாயின் 55 வயது பூரணமாகி பணியிலிருந்து ஓய்வு பெற்றிருப்பின் நிதியினை மீளப்பெற்றுக்கொள்ளலாம்.

2.நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரியதுமான ஒரு அரச நியமனத்தை பெற்றிருந்தால் வயதினை கருத்திலெடுக்காது நிதியினை மீளப்பெறலாம்.

3.வெளிநாட்டில் நிரந்தர வதிவிட விசாவினை பெற்றவர்கள் நிதியினை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

4.பெண்கள் திருமணம் காரணமாக வேலையினின்றும் விலகியிருப்பின் திருமணப் பதிவுத் திகதிக்கு முன் மூன்று மாதத்திற்குள் அல்லது பதிவுத் திகதியின் பின் 5 வருடங்களினுள் வேலையிலிருந்து விலகியிருந்தால் நிதியினை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

5.அரச கூட்டுஸ்தாபனங்களில் பணிபுரிந்தவர்கள் கூட்டுஸ்தாபனம் கம்பனியாக மாற்றும்போது தொழிலை இழந்திருப்பின் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் பரிந்துரைக்கப்படும் காலப்பகுதியினுள் இந்நிதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்குறித்த சந்தர்ப்பங்களில் மாவட்ட தொழில் அலுவலகங்களில் K எனக்குறிப்பிடப்படும் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பகுதி II இனை தொழில் தருநரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் என்ன காரணத்தால் நிதியை மீளப் பெற உள்ளாரோ அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. வயது காரணமாயின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்

2. அரச நியமனமாயின் அரச நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன் கடமையாற்றும் அலுவலக கடிதம்

3.திருமணமாயின் திருமண சாட்சிப்பத்திரம்

4. நிரந்தர வெளிநாட்டு வதிவிடமாயின் அதன் பிரதியுடன் கடவுச்சீட்டின் (பாஸ்போட்) பிரதி

5.கூட்டுஸ்தாபனம் மூடப்பட்டமையின் தொழில் ஆணையாளர் நாயகத்தின் கடிதப் பிரதி என்பன சமர்ப்பிக்கப்படவேண்டும். அத்துடன்

I. தனிப்பட்ட வங்கிக் கணக்கின் பிரதி வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்தப்பட்டது.

II. அங்கத்தவரின் பெயரில் எழுத்து வேறுபாடுகள் காணப்படின் எல்லாப்பெயர்களையும் குறிப்பிட்டு தொழில் தருநர் உறுதிப்படுத்தல் வேண்டும்

**இளைப்பாறிய உதவித் தொழில் ஆணையாளர் அமரர் சி. முத்துக்குமாரசுவாமியின் 31 ஆவது நினைவு நாளை (23.03.2013) முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

III. அடையாள அட்டையின் இலக்கங்களில் வித்தியாசமிருப்பின் ஆட்பதிவு திணைக்கள கடிதம் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. M படிவம் மூலம் மீளப்பெறல்

அங்கத்தவர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருப்பின் இனிமேலும் அவரால் கடமையாற்ற இயலாத சந்தர்ப்பத்தில் வைத்தியர் ஒருவர் சுகாதாரம் 307 படிவத்தில் அதனை உறுதிப்படுத்தி M படிவத்தின் ஊடாக குறித்த வயதிற்கு முன்னர் ஊழியர் சேமலாபநிதியை மீளப்பெறலாம். M படிவத்தினை அதே வைத்தியரிடம் உறுதிப்படுத்தி தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைப்பின் வைத்திய சபை (Medical Board) ஒன்றின் முன் அங்கத்தவரை தோற்றச் செய்து உறுதிப்படுத்திய பின் மீளளிக்கப்படும்.

3. L படிவம்

இறந்த அங்கத்தவர் ஒருவரினது ஊழியர் சேமலாப நிதியை அவரது நியமனதாரர்/ பின்னுரித்தாளி L படிவம் மூலம் மீளப் பெறலாம். பின்னுரித்தாளிகளாக நியமிக்கப்பட்ட அனைவரும் L படிவங்களையும் அதன் இணைப்புக்களையும் பெற்றுப் பூரணப்படுத்தி தொழில் தருநரிடம் பகுதி II ஐ உறுதிப்படுத்துவதுடன் G.S. (கிராமசேவகர்), D.S. (பிரதேச செயலாளர்) ஆகியோரது உறுதிப்படுத்தலுடன் தேவையான ஆவணங்களை இணைத்து மீளப்பெற்றுக்கொள்ளலாம். நியமனதாரர்/ பின்னுரித்தாளியை குறிப்பிடாத அங்கத்தவர்களது மீளளிப்பினை கணவன்/ மனைவி, பிள்ளைகள் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். பிள்ளைகள் இல்லாதவர்களாயின் 50% மனைவி/ கணவனிற்கும் மிகுதி 50% பெற்றோருக்கும் வழங்கப்படும். பெற்றோர் இல்லாத சந்தர்ப்பத்தில் சகோதரருக்கு வழங்கப்படும். இவ்வாறான சிக்கல்களை தவிர்க்க வேண்டுமாயின் A,B &H படிவங்களை அங்கத்தவர் நிரப்பியிருத்தல் வேண்டும்.

மேலும் ஊழியர் சேமலாப நிதியினை செலுத்தி அதனை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்கள் திங்கள் அல்லது புதன்கிழமைகளில் அந்தந்த மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கு சமுகமளித்து தேவையான அறிவுறுத்தல்களை பெற்று தமது நிதியை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

உதாரணமாக,

1.கடமையாற்றியநிறுவனம்மூடப்பட்டுள்ளது.

2.ஊழியர் சேமலாப நிதி தொடர்பான ஆவணங்கள் தொலைந்தமை

3.ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட்டது. ஆயினும் ஊழியர் சேமலாபநிதி இலக்கம் தெரியாத நிலையில் உள்ளவர்கள் போன்ற பிரச்சினைகள், சந்தேகங்கள் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

அண்மைக்காலமாக ஊழியர் சேமலாப நிதி மீளளிப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் யாழ்.மாவட்ட அலுவலகத்திலும் இறந்தவர்களது மீளளிப்பு சம்பந்தமான நடவடிக்கைகள், வடவலய தொழில் அலுவலகம், யாழ்ப்பாணத்திலிருந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மிகக்குறுகிய காலப்பகுதியில் மீளளிப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஊழியர் சேமலாப நிதி தொடர்பான நடவடிக்கைகள் யாவும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதால் ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றி மேற்குறிப்பிட்ட தடங்கல்களால் மீளளிப்பை பெறமுடியா திருப்பவர்கள் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஊழியர் சேமலாப நிதியம் அங்கத்தவர்களுக்கு வீடமைப்புக்கடன்திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அங்கத்தவர்களது கணக்கிலுள்ள மீதியின் 75% ற்கு சமமான தொகையினை வங்கியில் வீடமைப்பிற்கான கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். அங்கத்தவரது மீதிக்கு மத்திய வங்கி வட்டியை வழங்கும். அதேநேரம் கடன் தொகைக்கான வட்டி கடன் கொடுத்த வங்கியால் அறவிடப்படும். இக்கடன் காணி வாங்குதல், வீடுகட்டுதல், வீடு திருத்துதல் போன்றவற்றிற்கு வழங்கப்படும் அங்கத்தவரது கணக்கு மீதி பிணையாக உறுதிப்படுத்தப்பட்டு வீடுகட்டுவதற்கான ஆதாரங்களை தொழில் அலுவலகம் உறுதிப்படுத்தியதும் இக்கடன் வழங்கப்படும்.

**திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்**
**உதவித் தொழில் ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

ஊழியர் சேமலாபநிதி தொடர்பான பொதுவான விளக்கம் இங்கு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு சமுகமளித்து விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். யாழ்.மாவட்ட அலுவலக தொலைபேசி இல: 021 222 2375.

மேலும் ஒவ்வொரு பணியாளர்களுக்கும் பாதுகாப்பளிக்கும் இவ் ஊழியர் சேமலாப நிதியை சரியான முறையில் செலுத்தி தங்களது ஊழியர்களிடமிருந்து பயனுறுதி மிக்கசேவையைப் பெற்று தமது நிறுவனத்தை மேலும் வளர்ச்சியுற செய்து எல்லோருக்கும் சிறந்த சேவையை ஆற்ற வேண்டுமென அனைத்து தொழில் தருநர்களும் முன்வரவேண்டுமென தொழில் அலுவலகத்தின் சார்பில் எதிர்பார்க்கப்படுகின்றது.

(முற்றும்)

# முல்லை மாவட்டத்தில் பெய்த மழையினால் 23 ஆயிரத்து 620 விவசாயிகள் பாதிப்பு

## முல்லை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் தெரிவிப்பு


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் இவ்வாண்டு ஜனவரி மாதம் வரை பெய்த மழையினால் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது.

இவ்வாறு ஐந்து தடவைகள் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்களினால் 12 ஆயிரத்து 106 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கையும் 3 ஆயிரத்து 728 ஏக்கர் சிறு தானிய பயிர்ச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ. யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 183 ஏக்கரும் புதுக்குடியிப்பு பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 79 ஏக்கரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 581 ஏக்கரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 830 ஏக்கரும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 433 ஏக்கரும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறு தானிய பயிர்ச்செய்கையில் உழுந்து ஆயிரத்து 283 ஏக்கரும் நிலக்கடலை ஆயிரத்து 556 ஏக்கரும் பயறு 216 ஏக்கரும் கோப்பி 118 ஏக்கரும் மிளகாய் 82 ஏக்கரும் மரவள்ளி 143 ஏக்கரும் மரக்கறி 310 ஏக்கரும் பழப்யிர்கள் 20 ஏக்கருமென பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் முல்லை மாவட்டத்தில் 23 ஆயி ரத்து 620 விவசாயிகள் பாதிக்கப்படடுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-267)



மாத்தறை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாய இயக்கங்களுக்கு விவசாய உபகரணங்களை இலவசமாக பெற்றுக்கொடுக்கும் செயல் திட்டமொன்று மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இச்செயல் திட்டத்தின் கீழ் கம்புருபிட்டியா பிரதேச பியுலேவெல ஐக்கிய விவசாய இயக்கத்திற்கு பாராளுமன்ற உறுப்பினரால் உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்பு செய்யப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# கலந்துரையாடல்

ஸ்கந்தா- மகாஜனா வீரர்களின் துடுப்பாட்டப் போட்டி தொடர்பான சில ஒழுங்கு விதிகளை பின்பற்றுவதற்கான கூட்டம் பாடசாலை கந்தையா உபாத்தியாயர் அரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் பாடசாலை சமுகத்தினரை தவறாது கலந்து கொண்டு பாடசாலை பாரம்பரிய விழுமியங்களை ஒழுக்கத்துடன் பேணுவதற்கான கருத்துக்களை முன்வைத்து ஒழுங்காக துடுப்பாட்டப் போட்டி நடைபெற ஒத்துழைக்கும்படி அதிபர் ஈ.ஆர். ஈஸ்வரதாசன் கேட்டுள்ளார். (அ-2)

# பௌர்ணமி கலைவிழா

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் வலயக்கல்வி அலுவலகம் நடத்தும் பௌர்ணமி கலைவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியில் உள்ள இந்திரவதனி ஞாபகார்த்த திறந்தவெளி கலையரங்கில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் கண்ணுக்கு விருந்தாகவும் அறிவு பசிக்கு தேடலாகவும் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-3-15)

# முற்றோதல்

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஸ்ரீ காளி அம்பாள் தேவஸ்தான ஆலய பரிபாலன சபையின் அனுசரணையுடன் அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்தும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் மற்றும் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 8 மணிக்கு காளி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளதென திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வு அகில இலங்கை திருமுறை மன்ற தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி / கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

# ஆண்டு உற்சவ பங்குனி உத்தர பொங்கல் விழா -2013

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

நல்லாசிகள் பல என்றும் !

கிளி/கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவப் பங்குனி உத்தரப் பொங்கல் விழா - 2013 இம்முறை மிகவும் சிறப்பாக அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பூரண ஆதரவோடு வடக்கின் வசந்தமூடாக மின்சாரமும் இணைக்கப்பட்டு 26.03.2013 செவ்வாய்க்கிழமை இன்று நடைபெறுகின்றது. இவ்வளவு காலமும் அடியவர்கள் உங்கள் ஆதரவினால் நிறைய திருப்பணிகள் நடைபெறுகின்றது.

இம்முறையும் எல்லா அடியவர்களும் எம்பிரானின் பொங்கல் விழாவில் பங்குகொண்டு இறைவனுடைய திருவருளையும் பெற்று தொடர்ந்தும் நடைபெற இருக்கின்ற திருப்பணி வேலைகளுக்கும் அன்பளிப்புக்கள், காணிக்கைகளை அள்ளி வழங்கி பரிபூரண ஒத்து ழைப்பு வழங்குமாறும் பணிவுடன் வேண்டி இப்பொங்கல் விழா நாகதம்பிரான் குருவருளோடு சிறப்பாக நடைபெற எனது நல்லாசிகளையும் கூறி அமைகின்றேன்.

"எல்லோரும் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ்க"

*சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள் - சிறி ஐயா,*
*ஆலய பிரதம குருக்கள்,*

### அடியார்களின் கனவு நிறைவேறட்டும்

நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்தின் வடதிசையில் அமைந்திருக்கும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் பங்குனி உத்தரப் பொங்கலிற்கு வடக்கு மாகாண சைவ அடியவர்கள் பங்குபற்றி அருட்கடாட்சம் பெற்று வரும் இக்காலத்தில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு கும்பாபிசேகம் காண வேண்டுமென துடியாய் துடிக்கும் இலட்சோபஇலட்ச அடியார்களின் கனவு 2014 பங்குனிப்பொங்கலில் நிறைவேற வேண்டும் எனவும் அதற்குரிய பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என அடியவர்கள் உங்கள் அனைவரையும் மன்றாடி வேண்டி விடைபெறும்.

S.S. *சின்னத்தம்பி* J P
*தர்மகர்த்தா சபை , கிராம அலுவலர்,*
*புளியம் பொக்கணை.*

### ஆலய தலைவரின் நல்லாசி

நாகதம்பிரானின் நல்லருள் வேண்டி எல்லாம் வல்ல நாகேஸ்வர பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கி 26.03.2013 இன்று நடைபெறும் பொங்கல் விழாவில் எம் பெருமானின் திருவருள் வேண்டிவரும் மெய்யடியார்களே!

உங்கள் ஒவ்வொரு சதமும் ஆலயத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டு வருகிறது. இவ்வாண்டு ஆனிமாதம் ஆலயத்தின் மகா கும்பாபிசேகத்தை நடத்த எம்பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம். ஆகவே இவ்வாண்டு பொங்கலிலும் உங்கள் கரங்களினாலே அள்ளி வழங்கும் அன்பளிப்புக்கள் இந்த மகா கும்பாபிசேகத்தை சேரும் என்பதை மறக்காமல் உங்கள் அன்பளிப்புக்களை வேண்டி விழா சிறப்புற என்றும் எனது நல்லாசிகள் எல்லோருக்கும் என்று வேண்டி அமர்கின்றேன்.

*தலைவர் , தர்மகர்த்தா சபை,*
*ஆலய பரிபாலனசபை.*


பொங்கல் விழா
சிறப்புற எல்லாம் வல்ல
நாக தம்பிரானை
பிரார்த்திக்கும்............

**தாயன்பு**
**புத்தகசாலை**
பாடசாலை முன்பாக.
உடையார்கட்டு.

**அகரம் புத்தகசாலை**
**அன் பான்சி ஹவுஸ்**
சந்தை உட்புறம்,
விசுவமடு.

**தாரு**
**புடைவையகம்**
சின்ன சந்தையடி, இராமநாதபுரம்,
உரிமையாளர்: ரகு

**கண்ணன்**
**பல்பொருள் வாணிபம்**
விசுவமடு சந்தி. விசுவமடு
உரிமையாளர்: நிசாந்தன்

**முறிகண்டி**
**பல்பொருள் வாணிபம்**
துணுக்காய் வீதி, மல்லாவி.

**பிறைவிழி**
**பல்பொருள் வாணிபம்**
துணுக்காய் வீதி, மல்லாவி.

**பிரியன்**
**பான்சி ஹவுஸ்**
துணுக்காய் வீதி, மல்லாவி.

TATA Mahindra LEYLAND

டாட்டா, மகிந்திரா, லேடன்ட், நிறுவனங்களின்
அங்கீகரிக்கப்பட்ட உதிரிப்பாக விற்பனையாளர்கள்

✔ EICHER, Fotone, JAC ஆகிய நிறுவனங்களின் சகலவிதமான உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
✔ MRF ரயர், Valvoline Oil, Sat Hub கிறிஸ், பவர் ஒயில், பிறேக் ஒயில்



**தர்ணிகா மோட்டோர்ஸ்**

147, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9482, 077[illegible]
கிளை: ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. கொமர்சல் வங்கிக்கு அருகாமை) 021 228 0056, 0777448475


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த.தே.கூட்டமைப்பு வெளிநாடுகளில் இருந்து சேர்த்த பணம் எங்கே?

## த.வி.கூ. செயலாளர் ஆனந்தசங்கரி கேள்வி

(பூந்தோட்டம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிகளும் என்ன நடந்தாலும் ஒற்றுமையை சீர்குலைக்கக் கூடாது என்ற நோக்கோடு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பதிவு விடயத்தில் உள்ள இழுபறி நிலை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

கூட்டமைப்பாக பதிவு செய்வதில் தமிழரசுக் கட்சிக்கு எண்ணமில்லை. அவர்கள் எம் மீது சவாரி செய்யவே பார்க்கின்றனர். கூட்டமைப்பு உடையாதிருப்பதற்கு எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயார் என சம்பந்தர் கூறியிருந்தபோதிலும் அவர் இரண்டு வருடங்களாக இதனையே தெரிவித்து வருகின்றார்.

ஆனால், நாம் சப்பறத்தில் வைத்து அவரை காவ வேண்டியுள்ளது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக்கூட்டணி, டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் ஆகிய கட்சிகள் என்ன நடந்தாலும் ஒற்றுமையை சீர்குலைக்கக் கூடாது என்பதற்காக அர்ப்பணிப்போடு செயற்படுகின்றோம்.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான உங்களுக்கிடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதே என மக்கள் கவலை வெளியிடுகின்றனர் என கேட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏக பிரதிநிதிகள் அல்ல. ஏனெனில் கூட்டமைப்பினர் வட மாகாணத்தில் 63 ஆயிரம் வாக்குகள் பெற்றபோது சரத் பொன்சேகா யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 13 ஆயிரம் வாக்குகளை பெற்றுள்ளார். அவ்வாறு இருக்கையில் இவர்கள் ஏகபிரதிநிதிகளா?

ஆனால், சிலர் தேவையின் நிமிர்த்தம் அந்த நிலைப்பாட்டை எடுத்தபோது நான் அதனை எதிர்க்கவில்லை. தமிழகத்தில் ஒற்றுமை வலுப்பெற்றிருக்கும்போது அதனை சீர்குலைக்கக் கூடாது என்பதனால் நான் வாயை மூடிக் கொண்டுள்ளேன்.

நல்ல எண்ணத்துடன் தமிழரசுக்கட்சி செயற்படவில்லை. அவர்கள் அடுத்த வருட இருப்பை சீர் செய்வதற்கே செயற்படுகின்றனர். பொய்யிலேயேதான் இந்த கூட்டமைப்பு ஓடுகின்றது. உண்மையோ நேர்மையோ கிடையாது. எனவே, இவர்களுடன் வேலை செய்வது கடினமானது. எனினும் நான் குழப்பமாட்டேன்.

தமிழரசுக் கட்சியினர் வெளிநாடுகளில் இருந்து பணம் சேர்த்தார்கள். ஆனால், அதில் என்ன செய்கின்றனர் என்பது எங்களுக்கு தெரியாது. ஆனால், பணம் சேர்க்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு என்றே கூறப்படுகின்றது.

ஒருமுறை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சொல்லியிருந்தார், தான் மூன்று மாதம் வெளிநாட்டில் போய் வேலை செய்ததாக. தொடர்ந்து 3 கிழமை நின்றதாக உறுதிப்படுத்தினால் அடிமைச் சுவடி எழுதிக் கொடுக்க தயாராக உள்ளேன். ஆனால், அவர்கள் சொல்வதெல்லாம் வேத வாக்காக எண்ணி மக்கள் ஏமாறுகின்றனர். ஆனால், அவர்களுடைய வாயில் இருந்து வருவதெல்லாம் 75 வீதம் பொய்யாகும். அதனை நான் ஆதாரத்துடன் நிரூபிப்பேன்.

மக்களுடைய போராட்டத்தை பலவீனப்படுத்தக்கூடாது என்பதற்காக நாங்கள் சில விடயங்களை மறுக்காமல் மௌனம் சாதித்து வருகின்றோம்.

கிளிநொச்சிக்கு என்னுடன் வந்து பாருங்கள். எங்கு பசி இருக்கின்றது. எங்கு பட்டினி இருக்கின்றது என்பதை காட்டுகின்றேன். அத்துடன் எத்தனை பேர் கண், கால், கை இல்லாது என்னிடம் வந்து தமக்கு உதவி எதுவும் இல்லை. பசிக்கின்றது என்று கூறுகின்றனர்.



வருகின்ற 10 பேரில் 8 பேர் பொய் சொன்னாலும் கூட 2 பேர் அவ்வாறு உருவாகுவதற்கு காரணம் இவர்களும்தான். இவர்கள் எப்போதாவது மக்களுக்கு வீடில்லாததை பற்றி, நட்டஈடு கொடுப்பதைப் பற்றி பாராளுமன்றத்தில் பெரிய பிரச்சினையை கிளப்பி இருக்கின்றனா எனவும் கேள்வி எழுப்பினார். (அ-2-250-266)

# மன்னார் மீனவர்களுக்கான பாஸ் நடைமுறை நீக்கம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்காக கடற்படையினரால் இதுவரை காலமும் அமுல்படுத்தப்பட்டிருந்த பாஸ் நடைமுறை தற்போது நீக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவச் சங்கங்களின் சமாசத் தலைவர் நூர் முஹமட் முஹம்மது ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாருக்கு கடந்த வாரம் விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் பிரதியமைச்சர் சரத்குமார குணரட்ன மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டார். இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட மீனவர்களின் பாஸ் நடைமுறையினை நீக்குமாறு உரிய தரப்பினருக்கு அவர் உத்தரவிட்டார்.

இந்த நிலையிலேயே மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடற்படையினரால் அமுல்படுத்தப்பட்டிருந்த பாஸ் நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கடந்த பல வருடங்களாக கடற்படையினரால் பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதனால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்தப் பாஸ் நடைமுறையினை தளர்த்துமாறு கோரி தொடர்ச்சியாக மன்னார் மாவட்ட மீனவச் சங்கங்களின் சமாசம் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் மன்னார் மாவட்ட மீனவர்கள் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட தொழில் முறைமைகளை தவிர அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தொழில்களையும் மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வாரிக்குட்டியூர் மக்கள் தேனீ வளர்ப்பில் ஆர்வம்

(பூந்தோட்டம்)

வவுனியா வாரிக்குட்டியூர் கிராமத்தில் வாழும் மக்கள் தேனீ வளர்ப்பில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

இதனூடாக தமது வருமானத்திற்கும் மேலதிக வருமானத்தை தாம் பெற்று வருவதாக தெரிவிக்கும் தேனீ வளர்ப்பாளர்கள் இத் தொழிலில் ஒரு வருடத்தில் 15 போத்தல் தேனை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடினமற்ற முறையில் வருமானத்தை பெறக்கூடிய தொழில் முறையான இதில் மீள் எழுச்சி திட்டத்தின் ஊடாக ஈடுபட தாம் ஆர்வம் கொண்டதாகவும் தற்போது இது தமக்கு பெரும் தொழில் முறையாக மாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மீள் எழுச்சி திட்டத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் பொன்னையா கணேசமூர்த்தி தெரிவிக்கையில்,

தற்போது வாரிக்குட்டியூர் கிராமத்தில் 20 பேர் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு வருவதாகவும் சுய தொழில் முயற்சியாளர்களுக்கு இது ஒரு சிறந்த தொழில் முறை எனவும் தெரிவித்தார். (அ-2-250-266)

# நீதியரசர் குழுவிலிருந்து விலகினார் மொஹான்

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்யும் நீதிபதிகள் குழாமில் இருந்து பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் விலகியுள்ளார்.

இலங்கை அரசின் சார்பில் மத்திய வங்கி கிறீஸில் கொடுக்கல்-வாங்கல் செய்ததால் அரசுக்கு 250 பில்லியன் நட்டம் ஏற்பட்டதாக தெரிவித்து சுஜீவ சேனசிங்க மனு தாக்கல் செய்துள்ளார்.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நிமல் காமினி அமரதுங்க மற்றும் ஹெட்டிகே ஆகியோர் முன்னிலையில் குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

மொஹான் பீரிஸ் மத்திய வங்கியின் சட்ட ஆலோசகராககடமையாற்றியுள்ளதால்மனுவை விசாரிக்க தகுதியுடையவரல்ல என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.


அந்த எதிர்ப்பை ஏற்றுக் கொண்ட பிரதம நீதியரசர் தான் உள்ளடங்காத நீதியரசர்கள் முன்னிலையில் மனு எதிர்வரும் ஜூன் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவித்தார். (அ-2)

# மின் கட்டண உயர்வை எதிர்த்து கையெழுத்து வேட்டை

மின் கட்டண உயர்வை கண்டித்து பொது மக்கள் மனுவில் கையெழுத்து பெற தொழிற் சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

மின் கட்டண உயர்வு குறித்து இலங்கை மின்சார சபை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ஆணைக்குழுவிடம் முன்வைத்துள்ள கோரிக்கை நுகர்வோருக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியது என ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் மனுவில் கையெழுத்திடும் திட்டம் நேற்று மாலை தொடக்கம் கோட்டை புகையிரதத் திற்கு முன்பாக இடம்பெற்றது. (அ-2)



மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றபோது... (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளை அனுசரிக்கப் பழகிக் கொண்டால் இந்த உலகம் உங்களுக்கேற்ற பூங்காவாக விளங்கும்.

*-சாள்ஸ் டிக்கின்ஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பேச்சுக்கான சர்வதேச மத்தியஸ்தம் அமெரிக்காவாகவே இருக்க முடியும்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறியுள்ளது.

தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் கனகாத்திரம் பற்றிய ஆய்வுகளை ஒரு புறம்தள்ளி வைத்துவிட்டு,

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி இலங்கை அரசு சிந்திக்குமாக இருந்தால், அத்தீர்வு பற்றி இலங்கை அரசு அமெரிக்கப் பிரதிநிதிகளுடனேயே பேச வேண்டும்.

தமிழ் மக்களுக்கு அரசு கொடுக்கும் அதிகாரங்கள் என்ன? அவை எவ்வாறு அமுல்படுத்தப்படும் என்றவாறான விடயங்களை எல்லாம் அமெரிக்காவிடம் எடுத்துக் கூறவேண்டும்.

இலங்கை அரசு முன்வைக்கின்ற தீர்வு குறித்து அமெரிக்கா தமிழ்த் தரப்புக்களின் ஆலோசனைகளை, அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து தீர்வைச் செம்மைப்படுத்த வேண்டும்.

இதனை இன்னொரு பொருளில் கூறுவதாயின், இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசுடன் நேரடியாகப் பேசுவதற்கு தமிழ்த் தரப்புக்கள் எவையும் முற்படக்கூடாது.

சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் பேசுதல் என்ற பொறிமுறைப் பிரயோகங்களில் கூட இப்போது திருத்தங்கள் செய்தாக வேண்டும்.

அதாவது, சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் பேசுதல் என்பதை திருத்தம் செய்து அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் பேசுவது என மாற்றிக் கொள்வது கட்டாய நிபந்தனையாகும்.

அமெரிக்காவின் மத்தியஸ்தம் என்பது இலங்கை அரசும் தமிழ்த் தரப்புக்களும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கானதல்ல.

மாறாக, இலங்கை அரசு தனித்து தனது தீர்வுத் திட்டத்தை அமெரிக்காவிடம் சமர்ப்பிக்க,

தொடர்ந்து அத்தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்த் தரப்புகள் அமெரிக்காவுடன் ஆராய்வதாக அமைதல் வேண்டும்.

சுருங்கக்கூறின், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இனிமேல் இலங்கை அரசும் தமிழ்த் தரப்புக்களும் சந்தித்து பேசுதல் என்ற பேச்சுக்கே இடமிருக்கக்கூடாது.

அத்தகைதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால் தமிழ்த் தரப்புக்களில் உள்ள முக்கியமானவர்கள் விலை போகக் கூடிய வாய்ப்பு நிச்சயம் உண்டு.

இதற்கு மேலாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் மத்தியஸ்தம் முற்றாக நிராகரிக்கப்படுவதும் அவசியமாகும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தரப்புக்களின் இராஜதந்திரமற்ற முன்னெடுப்புக்களே எங்கள் வீழ்ச்சிக்கு காரணம் என்பதையும் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வருவதற்கும் இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்ற உண்மையையும் உணர்ந்து கொண்டு செயற்படுவது உத்தமம்.

# இனப்படுகொலைக்கு உதவியவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்

## தமிழர் களம் பொதுச் செயலாளர்



தண்டிக்கப்பட வேண்டியது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள சிலரும்தான் என தமிழர் களம் பொதுச் செயலாளர் அரிமாவளவன் தெரிவித்துள்ளார்.

மணப்பாறை நகரில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமிழீழம் கோரி உண்ணாவிரதம் இருந்தனர். அவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் நகரின் வீதிகள் வழியாக தமிழீழம் ஒன்றே தீர்வு என்று முழக்கமிட்டு நகர் வலம் வந்தனர்.

இலங்கை ஜனாதிபதி ஒரு போர்க் குற்றவாளி. அனைத்துலக நீதிமன்றத்தின் முன்பாக அவர் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு செய்த படுகொலைகளுக்கும் பாதகங்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்

ஆனால், ஈழத்தில் நடந்த படுகொலைகளுக்கு அவர் மட்டுமா காரணம்? இலங்கைப் படைகள் மட்டும் தனித்து நின்று விடுதலைப்புலிகளோடு மோதியிருக்குமானால் தலைவர் பிரபாகரன் தலைமையில் என்றைக்கோ தமிழீழம் அமைந்திருக்கும்

ஆனால் இனவெறி பிடித்த நாடுகள் உடனிருந்து ஓர் இனப்படுகொலையை நிகழ்த்தின. அவைகள் இன்று இலங்கை என்ற முகமூடிக்குள் ஒளிந்து கிடக்கின்றன.

இலங்கைக்கு ஆயுதங்களும் இரசாயன ஆயுதங்களும் கொத்துக் குண்டுகளும் தடை செய்யப்பட்ட ஆயுதங்களையும் வழங்கியது இந்தியா இல்லையா? இலங்கைக்கு ஆதரவாக படைகளை அனுப்பியது டில்லி ஆட்சியாளர்கள் இல்லையா? உளவு சொன்னது இவர்கள் இல்லையா? போருக்குப் பணம் கொடுத்தது இவர்கள் இல்லையா? அங்கு அப்பட்டமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது இவர்கள் இல்லையா?

உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தானே தீரவேண்டும்! இந்திய-இலங்கை கூட்டோடு சீனாவும் பாகிஸ்தானும் கூடிச்சேர்ந்து கோரத் தாண்டவம் ஆடவில்லையா? இவர்களுக்கு எல்லாம் மேலாக தமிழினத்தின் காவலனாக வேலேந்தி நிற்க வேண்டிய கடமையிலிருந்த தமிழக அரசு என்ன செய்தது?

மேனனும் நாராயணனும் கொழும்புக்கு ஓடோடிச் சென்று ஆதரவு அளித்த போது, சென்னை கோபாலபுரத்தின் கதவுகளை தட்டி ஆலோசனையும் ஆதரவும் பெற்ற பின்னர் தானே சென்றார்கள்.

9 ஆண்டு காலம் அவர்களோடு கூடிக் குலவி ஆட்சி சுகம் கண்ட கருணாநிதி இன்று பதவியைத் தூக்கி எறிவதால் மட்டும் குற்றவாளிக்கூண்டில் இருந்து இறக்கி விடலாமா?

இப்படி இவர்களையெல்லாம் தப்பிக்க விட்டு ராஜபக்ஷவுக்கு மட்டும் தண்டனை வழங்கினால் தமிழீழ மண்ணில் உயிரை விதையாக்கிய ஆயிரமாயிரம் பச்சைக் குழந்தைகளின் உயிர்கள் அதை மன்னிக்குமா?

உயிர் கொடுத்த போராளிகளும் உயிர்நீத்த அப்பாவி மக்களும் ஏற்றுக் கொள்வார்களா? (அ-2)

# விளைத்திறன்காண் பரீட்சை

வட மாகாணத்திலிருந்து முதலாம், இரண்டாம் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களிற்கான வினைத்திறன் காண் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்றுபவர்கள் அனுமதி அட்டையினை வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் க.தெய்வேந்திரனிடம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

பரீட்சை தொடர்பான மேலதிக தகவல்களினை 0777811212 என்னும் தொலை பேசியினூடாக பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-4)

# வள்ளி திருமணம்

(யாழ்ப்பாணம்)

நாட்டார் கலை இலக்கிய கழகத்தினால் வழங்கப்படும் வள்ளி திருமணம் என்னும் நாடகம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கீரிமலை சிவபூமி மடத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-5)

# நிலா முற்றம் பகுதி -15 நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மனித ஆளுமை உருவாக்கத்திற்கு மொழியியலின் பங்கு என்ற தொனிப் பொருளில் நிலாமுற்றம் பகுதி-15 என்ற நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரையும் இல.82, பிறவுண் வீதி (நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) உள்ள Nation Popular Travels & Tours இன் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சிங்கள மொழியியல் பற்றி ஆசிரியர் திருமதி சுலக்ஷனா சசிக்குமார், ஆங்கில மொழியியல் பற்றி ஆசிரியர் வரதராஜா சசிக்குமார் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

அத்துடன் இந்நிகழ்விற்கு ஆய்வாளர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மீட்கப்பட்ட எலும்புகள் மாட்டினுடையவை!

வாகரை பனிச்சங்கேணிப் பிரதேசத்தின் தோட்டம் ஒன்றில் மீட்கப்பட்ட எலும்புகள் மாட்டினுடையது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதிபதி முகமட் றியால் தலைமையில் இந்த எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட இடம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை தோண்டப்பட்டது.

அவ்வேளையிலேயே அந்த இடத்தில் இருந்து மேலும் மாட்டு எலும்புகள் கண்டெடுக்கப்பட்டதாக வாகரைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித ஜெயரட்ண தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை பனிச்சங்கேணியில் உள்ள நிலம் ஒன்றில் உல்லாச விடுதி நிர்மாணத்திற்காக நிலம் தோண்டப்பட்டபோது எலும்புகள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

அது பற்றி அந்தக் காணியின் உரிமையாளர் வாகரைப் பொலிஸாருக்கு முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இதனையடுத்து குறித்த அந்தப் பிரதேசத்திற்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

மேலதிக விசாரணைகளுக்காகவும் ஆய்வுகளுக்காகவும் நேற்று குறித்த இடத்திற்கு நீதவான் விஜயம் செய்தார்.

இதன்போது நீதவான் முன்னிலையில் தோண்டப்பட்டபோது அங்கு புதைக்கப்பட்டிருந்தவை மாட்டு எலும்புகளே என உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தப் பகுதியில் உக்கிப்போன மனித எச்சங்கள் காணப்பட்டதாக வெளியான தகவலை அடுத்து மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-4)

# விபரங்களை பதியவும்

வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தங்களது பூர்வீக சொத்துக்களை பாதுகாப்பதற்காகவும், மீள்குடியேற்றத்தினை துரிதப்படுத்துவதற்காகவும், உறுதிப்படுத்துவதற்காகவும் இடம்பெயர்ந்து வசிக்கும் கிராம சேவகர் பிரிவுகளில் சொத்துக்களையும், குடும்பவிபரங்களையும், பதிவு செய்யும்படி தையிட்டி, ஊறணி, காங்கேசன்துறை மீள்குடியேற்றக் குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர். (எ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## தவறுகளையும் வாழ்த்துங்கள்



✦ அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

✦ மகத்தான செயல்களைச் செய்யவே இறைவன் நம்மைத் தேர்வு செய்கிறான். அவற்றைச் செய்து முடிப்போம் என்று உறுதியெடுங்கள்.

✦ பசியால் நலிந்துவாழும் மக்களிடையே சென்று சமயப் பிரசாரமும் தத்துவ போதனையும் செய்வது அவர்களை அவமதிப்பதாகும்.

✦ மிருக, மனித, தெய்வீக இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடமுள்ள தெய்வீகத்தன்மையை வளர்க்கக்கூடியதுதான் நல்லொழுக்கம். மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வது தீய ஒழுக்கம்.

✦ நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலேயே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

✦ வாழ்க்கையில் வெற்றிபெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருக்கவேண்டும். அந்தக் குணங்கள்தாம் அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்தது ஏதோ... நடந்தது ஏதோ...! – வொட்சன்



டில்லியில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் தோல்வியை தழுவி, அவுஸ்திரேலியா 0-4 என்ற மிகப்பெரும் தொடர் இழப்பை சந்தித்தது. கடந்த வருடம் இதுபோன்று ஒரு தோல்வியை சந்தித்த இந்தியா அதற்கு பழிவாங்கும் விதமாக இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது.

இதுகுறித்து 4 ஆவது போட்டிக்கு தலைமை தாங்கிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஷேன் வொட்சன் டில்லியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது தொடர் தோல்வி குறித்து அவர் கூறியதாவது:-

இந்தியாவிற்கு எதிரான இந்த கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் 0-4 என்ற தோல்வியை சந்தித்துள்ளது எங்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை தந்துள்ளது. இந்த தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கையில் வந்தோம். ஆனால், நாங்கள் விரும்பிய வெற்றி கிட்டவில்லை. நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை. மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவது என்பது அவுஸ்திரேலியாவிற்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. இந்த மிகப்பெரிய தோல்வியின் மூலம் நாங்கள் உடனடியாக நிறைய கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவிற்கு எதிராக நிறைய விளையாட்டுகளை இங்கு சந்தித்திருக்கிறேன். இருந்தும் நான் அதிகம் ஓட்டங்கள் சேர்க்கவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றே. இவ்வாறு அவர் கூறினார்.

# தொடரை இழந்தது பாகிஸ்தான்





பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இதன்மூலம் 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை 3-2 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

தென்னாபிரிக்காவின் பெனானி நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 49.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியில் அதிகபட்சமாக கம்ரான் அக்மல் 48 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 44 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்கள் எடுத்து வெற்றி கண்டது. டிவில்லியர்ஸ் 111 பந்துகளில் 1 சிக்ஸர், 9 பவுண்டரிகளுடன் 95, ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஆட்டநாயகன், ஆட்ட தொடர் நாயகனாக தென்னாபிரிக்க அணித்தலைவர் டிவில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# பாக்.அணிக்கு உதவத் தயார்



– வசீம் அக்ரம்

பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர்கள் தொடர்பாக நெருக்கடி, குழப்ப நிலை நிலவுவதாகவும், அந்நிலையைத் தீர்க்க உதவ விரும்புவதாகவும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், வேகப்பந்து வீச்சாளருமான வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

உலகத்தரமான வேகப்பந்து வீச்சாளர்களைப் பிரசவிக்கும் நாடு எனப் புகழப்படும் பாகிஸ்தான் அணியில் அண்மைக் காலமாக வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பான முறையில் பெறுபேறுகளை வெளிப்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி உலகக் கிரிக்கெட்டில் மேலிடத்திற்குச் செல்வதை விரும்புவதாகக் குறிப்பிட்ட வசீம் அக்ரம், தென்னாபிரிக்காவில் அண்மையில் முடிவடைந்த டெஸ்ட் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் பெறுபேறுகள் தனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் புதிதாக வேகப்பந்து வீச்சு திறமையாளர்களைக் கண்டுபிடிக்க முடியுமெனத்தான் கருதுவதாகத் தெரிவித்த வசீம் அக்ரம், அவர்களின் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட்டை மேல்நிலைக்குக் கொண்டுவர முடியுமெனக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் எப்போதும் மிகச்சிறப்பாக வேகப்பந்து வீச்சாளர்களைப் பிரசவித்து வந்திருக்கிறது எனக் குறிப்பிட்ட வசீம் அக்ரம், தன்னால் 10, 12 அவ்வாறான வேகப்பந்து வீச்சாளர்களைக் கண்டுபிடிக்க முடியுமெனத் தான் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜோனாதன் ட்ரொட் சிக்ஸர் அடிக்காமல் சாதனை




முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் விஜய் மஞ்ச்ரேகர் 1951 இலிருந்து 1965 வரை 55 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஒரு சிக்சர் கூட அடிக்காமல் 3,208 ஓட்டங்கள் சேர்த்து இருந்தது இதுவரை சாதனையாக இருந்தது.

தற்போது நடைபெற்றுவரும் நியூசிலாந்து-இங்கிலாந்து டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து வீரர் ஜோனாதன் ட்ரொட் 27 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம், ஒரு சிக்சர் கூட அடிக்காமல் மஞ்ச்ரேகரை விட 7 ஓட்டங்கள் அதிகமாக, அதாவது 3,215 எடுத்து அந்த சாதனையை கடந்தார்.

# மிக்கி ஆதரின் நிலை என்ன?



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் நீக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அவருக்கு பதிலாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டாரன் லேமென் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் என கூறப்படுகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் போட்டியில் இவரது பயிற்சியின் கீழ்தான் டெக்கான் சார்ஜர்ஸ் அணி கிண்ணத்தை வென்றது.

தற்போது குயின்ஸ்லாந்து அணிக்கு பயிற்சியாளராகவுள்ள லேமென் விரைவில் தேசிய அணியின் பொறுப்புக்கு வரக் கூடும் என டெய்லி டெலிக்ராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மிக்கி ஆர்தர் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டால் அதற்கு கிளார்க் - வொட்சன் மோதலும், இந்தியாவுக்கு எதிரான தொடர்தோல்வியும் முக்கிய காரணமாக இருக்கும் என அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# இந்தியாவுக்கு 3 ஆம் இடம்

அவுஸ்திரேலியாவை வீழ்த்தியதன் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் அணிகளின் தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருந்த இந்திய அணி 7 புள்ளிகளை கூடுதலாக பெற்று 112 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

3ஆவது இடத்தில் இருந்த அவுஸ்திரேலியா 4ஆவது இடத்திற்கு (110 புள்ளி) இறங்கியுள்ளது. தென்னாபிரிக்க அணி (128 புள்ளி) தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. தற்போது 2ஆவது இடம் வகிக்கும் இங்கிலாந்து அணி (118 புள்ளி) நியூசிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் வெற்றி பெற்றால் மட்டுமே அந்த இடத்தை தக்க வைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஷாந் சர்மாவுக்கு அபராதம்

அவுஸ்திரேலிய அணியுடனான நான்காவது டெஸ்ட்டின்போது போட்டி விதிமுறைகளை மீறியதற்காக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மாவிற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் பற்றின்சனின் விக்கெட்டை வீழ்த்திய இஷாந்த் ஷர்மா, அவரை பவிலியனுக்கு செல்லுமாறு சைகை செய்தார். இஷாந்த் சர்மாவின் இந்த செயல் நடுவர் ரஞ்சன் மதுகல்லேவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதையடுத்து போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதத்தை அபராதமாக செலுத்த வேண்டும் என போட்டி நடுவர் உத்தரவிட்டார். இஷாந்த் ஷர்மாவும் அபாரத் தொகையை செலுத்த ஒத்துக்கொண்டுள்ளார்.

# வோணர் - ஜடஜா மோதல்


டில்லியில் நடைபெற்ற 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா வீரர் ஜடஜாவும் அவுஸ்திரேலிய வீரர் வோணரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தோனியும் ஜடேஜாவும் களத்திலே நின்றபோது பற்றின்சன் பந்து வீச்சின்போது, ஜடஜாவுக்கும் பற்றின்சனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பற்றின்சன் நடந்து கொண்டவிதத்திற்கு தோனி அதிருப்தி தெரிவித்தார். இந்த சமயத்தில், தோனியை அவமதிக்கும் வகையில் வோணர் ஏசியுள்ளார்.

இதையடுத்து மற்றொரு இந்திய வீரரான ஜடேஜா துடுப்பை காட்டி வோணரை எச்சரித்தார். பின்னர் நடுவர் இரண்டு அணியின் தலைவர்களையும் அழைத்து பேசியதையடுத்து ஜடேஜா-வோணர் மோதல் முடிவுக்கு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். போட்டிகளில் பீற்றர்சன் அவுட்?



நியூசிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின்போது இங்கிலாந்து வீரர் பீட்டர்சனுக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் 6ஆவது ஐபிஎல் தொடரில் ஆட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


நியூசிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின் போது இங்கிலாந்து வீரர் பீட்டர்சனுக்கு முழங்காலில் ஏற்பட்ட காயத்தினால் அவருக்கு வலது முழங்காலில் அதிக வலி ஏற்பட்டதாகவும் இதையடுத்து காயமேற்பட்ட காலின் பகுதியை ஸ்கான் செய்து பார்த்ததில் அவருக்கு எலும்பில் தேய்வு காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அடுத்துவரும் 6 முதல் எட்டு வாரங்களுக்கு விளையாட முடியாது என்றும் கூறப்படுகிறது.

இதையடுத்து ஐபிஎல் தொடரிலும் அவர் இந்த ஆண்டு விளையாடமாட்டார்.

## இங்கிலாந்துக்கு எதிரான 3-வது டெஸ்ட்

# நியூசிலாந்துக்கு வெற்றி வாய்ப்பு



நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் நடைபெற்று வருகின்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தமது முதல் இன்னிங்ஸுக்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 443 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பீற்றர் புல்ரன் 136 ஓட்டங்களையும், கேன் வில்லியம்ஸன் 91 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் ஸ்ரீவன் பின் 125 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸுக்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி நியூசிலாந்து வீரர்களின் வேகத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அதிகபட்ச ஓட்டமான 91 ஓட்டங்களை மற் பிரையர் எடுத்தார்.

239 ஓட்டங்கள் என்ற முன்னிலையுடன் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி, நேற்று முன்தினம் 3-ம் நாள் ஆட்ட நேர முடிவில் முக்கிய 3 விக்கெட்டுக்களை 35 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறிக் கொண்டிருந்தது.

இந்நிலையில் நேற்றைய 4-ம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவ்வணி, தொடர்ந்து வந்த மற்றைய வீரர்களின் பங்களிப்புடன் 6 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 241 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் முதலாவது இன்னிங்ஸில் சதம் கடந்த பீற்றர் புல்ரன் 2-வது இன்னிங்ஸிலும் சதம் கடந்து 110 ஓட்டங்களைக் குவித்தார்.

தவிர அணித்தலைவர் பிரண்டன் மக்கலம் 67 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ரூவேர்ட் பிரோட், மொண்டி பனேசர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

481 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்குடன் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு, பகுதிநேர பந்து வீச்சாளர் கேன் வில்லியம்ஸனின் பந்துவீச்சு சிக்கலை ஏற்படுத்தியது. இதனால் நேற்றைய 4-ம் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தடுமாறிக் கொண்டிருக்கிறது.

களத்தில் இயன் பெல் 8 ஓட்டங்களுடன் உள்ளார்.


பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் பகுதிநேர பந்து வீச்சாளர் கேன் வில்லியம்ஸன் 2 விக்கெட்டுக்களையும், சௌதி, வோக்னர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் 5-வதும் இறுதியுமான நாளாகும்.

போட்டியில் வெற்றி பெற நியூசிலாந்து அணிக்கு இங்கிலாந்து அணியின் 5 விக்கெட்டுக்கள் தேவையாகவுள்ள நிலையில், மறுபுறத்தில் இங்கிலாந்து அணிக்கு 391 ஓட்டங்கள் தேவையாக உள்ளது.


பொதுவில் நியூசிலாந்து அணிக்கே வெற்றி வாய்ப்பு காணப்படுகின்றது.

எனினும் இங்கிலாந்து அணிக்கு வெற்றி என்ற வாய்ப்பு காணப்படாவிட்டாலும், தோல்வியுடன் தொடர் இழப்பும் ஏற்படாதிருக்க இன்றைய நாள் முழுவதையும் சமாளித்தே ஆக வேண்டிய நிலையில் காணப்படுகிறது. இதனுடன் போட்டியின் காலநிலையும் இங்கிலாந்துக்கு கைகொடுத்தால் சரி.



## கிரிக்கெட் சபை உறுதி

# சென்னையில் திட்டமிட்டபடி ஐ.பி.எல் போட்டிகள்



ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வருகிற 3-ந்திகதி தொடங்குகிறது. மே-26ம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறுகிறது.

ஐ.பி.எல் போட்டியில் 13 இலங்கை வீரர்கள் ஆடுகிறார்கள். பஞ்சாப் அணியை தவிர மற்ற 8 அணிகளிலும் இலங்கை வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை பிரச்சினை காரணமாக மாணவர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் காரணமாக சென்னையில் நடைபெறும் போட்டிகளில் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்கமாட்டோம் என்று மாணவர் பேரமைப்பு எச்சரித்துள்ளது.

இதனால் ஐ.பி.எல் போட்டியில் இலங்கை வீரர்கள் பங்கேற்பார்களா? என்ற கேள்வி எழுந்தது.

இதற்கிடையே இந்தப் பிரச்சினை தொடர்பாக சென்னையில் நடைபெறும் போட்டிகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று மற்ற ஐ.பி.எல் உரிமையாளர்கள் வேண்டுகோள விடுத்தனர். ஆனால் சென்னையில் நடைபெறும் போட்டி மாற்றம் இல்லை என்று ஐ.பி.எல் அமைப்பின் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் சென்னையில் திட்டமிட்டபடி ஐ.பி.எல்.போட்டி நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. இது குறித்து இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறும்போது ,

தற்போதுள்ள நிலைமைப்படி சென்னையில் ஐ.பி.எல் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும். சென்னையில் நடைபெறும் போட்டியை மாற்றும் திட்டம் இல்லை என்றார்.

ஐ.பி.எல் அமைப்பின் தலைவர் ராஜீவ் சுக்லா கூறும் போது,

நாங்கள் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருன்றோம் என்றார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் குலசேகர, அசாவா தனஞ்செயா ஆகிய 2 இலங்கை வீரர்கள் உள்ளனர். இவர்கள் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் விளையாடாமல் இருக்க வாய்ப்புண்டு. ஆனால் மற்ற அணிகளில் உள்ள இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடமல் இருப்பார்களா? என்பது உறுதியாக தெரிய வில்லை.


இது குறித்த தெளிவான விளக்கத்தை கிரிக்கெட் சபையோ, ஐ.பி.எல் அமைப்போ உறுதியாகஎதுவும்தெரிவிக்கவில்லை.

மற்ற அணிகளில் உள்ள இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாடினால் பாதுகாப்பு பிரச்சினை ஏற்படும்.

இதனால் ஐ.பி.எல். அமைப்பு சென்னை பொலிஸாரிடம் பாதுகாப்பு அளிக்கும்படி வலியுறுத்தி உள்ளது.

## திலங்கவின் விண்ணப்பங்கள்

# நிராகரிப்பு



இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமத்தி பாலவால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## விக்ரம் -ராஜன்-கங்கு

# சம்பியன் கிண்ணம் ஜொலிஸ்ரார்ஸ் வசம்

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தினால் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியினை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வந்தது.

போட்டிகளின் இறுதிப் போட்டியில் கடந்த சனிக்கிழமை 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கும் ஜொலிஸ்ரார் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 40 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஜெயேந்திரன் 61, ஜசிந்தன் 50, அச்சுதன் 28, ஜெயரூபன் 20 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணி சார்பாக றுக்ஸ்மன் 3 இலக்குகளையும், பகீரதன், சைலேஸ்வரன் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

223 என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜொலிஸ்ரார்ஸ் அணியினர் 37.1 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தனர்.

துடுப்பாட்டத்தில் லஸ்மிகாந் 53, பிரியலக்ஸன் 62, றுக்ஸ்மன் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

போட்டியின்நாயகனாக ஜொலிஸ்ரார்ஸ் அணியின் லக்ஸ்மிகாந்தும்,தொடரின் நாயகனாக அவ்வணியின் வீரர் மதுசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசுக்கு...

தமிழர்களுக்கு அந்தநாட்டில் அநீதி இழைக்கப்பட்டு வரும் வேளையில் இத்தருணத்தைப் பயன்படுத்தி போர்க் குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணைக்கு இலங்கையை ஒப்புக் கொள்ள வைக்க வேண்டும்.

மாநாட்டினை இலங்கையிலிருந்து வேறு நாட்டுக்கு மாற்றவும் இந்தியா முயலலாம் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

எப்படியும் தமிழ்நாட்டு மக்கள் மத்திய அரசின் அணுகுமுறை குறித்து ஏமாந்திருக்கும் நிலையில் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும். ஏற்கெனவே கனடா அவ்வாறு செய்யப்போவதாக செய்திகள் வந்திருக்கின்றன என்று தனது கடிதம் ஒன்றில் ஜெயலலிதா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதேபோன்று நேற்றுக்கூடிய தி.மு.க. செயற் குழுவும் பொதுநலவாய மாநாட்டினைப் புறக்கணிக்க வேண்டுமென வலியுறுத்தி தீர்மானம் இயற்றியிருக்கிறது.

இதேவேளை, இலங்கைத்தமிழர்பிரச்சினையில் திராவிட முன்னேற்றக் கழகம் துரோகம் இழைத்துவிட்டது என்ற அ.தி.மு.கவின் குற்றச்சாட்டைக் கண்டித்து தி.மு.க. உறுப்பினர்கள் நேற்று சட்டப் பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று 2013 - 2014-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தொடர்பில் உரையாற்றிய அ.தி.மு.க. பெண் எம்.எல்.ஏ.வும் துரையூர் சட்டமன்ற உறுப்பினருமான இந்திரா காந்தி, இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க.தலைவர் கருணாநிதி துரோகம் இழைத்துவிட்டதாக குற்றஞ்சாட்டினார்.

அ.தி.மு.கவின் இந்தக் குற்றச்சாட்டுக்கு தி.மு.க.உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தி.மு.க.சார்பில் பேசிய உறுப்பினர் சக்கரபாணி, 1956-ம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க.பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறினார்.

அப்போது குறுக்கிட்டு பேசிய அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன் மற்றும் வளர்மதி ஆகியோர், இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கும், அந்த இனமே அழிவதற்கும் தி.மு.க.தான் காரணம் என்று கூறினர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (எ-4)

# அல்லாவை...

களுக்கு எதிராக கையடக்க தொலைபேசிகளில் செய்திகளை அனுப்பும்சக்திகள்உள்ளன.

அவ்வாறன செய்தி ஒன்றில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நான் கடவுளாக வணங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது மதத்தின் தூஷிக்கும் நடவடிக்கையாகும். எவர் எந்தளவுக்கு முன்னோடியாக இருந்தாலும் முஸ்லிம்கள் அவரை கடவுளாக கருத மாட்டார்கள். அல்லாவை தவிர வேறு எவரையும் முஸ்லிம்கள் வணங்க மாட்டார்கள் எனவும் அஸ்வர் கூறியுள்ளார். (எ-4)

# முஸ்லிம்...

தாக்குதல்கள் நடந்துள்ளன.

இவற்றைக் கண்டிப்பதற்காக முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு என தங்களை குறிப்பிட்டுக் கொள்ளும் ஓர் அமைப்பு நாடளாவிய ரீதியில் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுத்திருந்தது.

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் வியாபார நிலையங்கள், சந்தைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

பாடசாலைகள் இயங்கவில்லை, அரச காரியாலயங்களின் செயல்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்தது, உள்ளூர் போக்குவரத்துச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டது. (எ-4)

# தமிழரின்...

போதிலும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை. அத்துடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தையும் இந்த அரசு வழங்கவில்லை.

இந்த காலப்பகுதியில் ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்ட அரசு தமிழர்களின் கலாசாரத்தை மாற்றியமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

செய்ய வேண்டியதைச் செய்யாது முற்றிலும் அதற்கு மாறான பாதையிலேயே மகிந்த அரசு பயணிக்கிறது. குறிப்பாக ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறியதால் தமிழர் பிரச்சினை தீர்ந்து விட்டது என அர்த்தப்படாது.

எனவே அரசு உள்நாட்டில் பொறிமுறையை வகுக்க வேண்டும். இனங்களுக்கிடையிலான தேசிய சமத்துவத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

ஜெனிவா பிரேரணை விடயத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக மகிந்த அரசு நாட்டின் பொருளாதாரத்தை அமெரிக்காவிடம் வழங்கவும் இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு முன்னிலை சோஷலிஸக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார். (எ-4)


## படிவம்

வளிமண்டலவியல் திணைக்களம்

★ வாகனம் ஓட்டுநர் பதவி ★ சிற்றூழியர் வகுப்பு III

★ பட்டதாரி ஆசிரியருக்கான விண்ணப்ப படிவம்

ஆகிய விண்ணப்பங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் ஏனைய பிரபலமான புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவு திகதி: 01.04.2013

எஞானம்ஸ் பிறிண்டேர்ஸ்

237, கந்தர்மடச் சந்தி, யாழ்ப்பாணம். 0777174613

(225)


# வடக்கு மக்கள் ஏமாற்றம்

## -மன்னார் ஆயர்

கள்வனிடமே களவு தொடர்பில் விசாரணை நடத்தக் கோருவது எந்த வகையில் நியாயமென மன்னார் மறைமாவட்ட பேராயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால், வடக்கு மக்கள் மிகுந்த ஏமாற்றமடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-4)

# ஜெனிவா தீர்மானத்து...

எனத் தெரிவித்த அவர், நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளின் அமுலாக்கத்தை அரசு காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. மனித உரிமைகள் விவகாரத்தில் எமக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் உரிமை அமெரிக்காவுக்கு கிடையாது.

ஏனெனில், உலகில் அதிகமாக மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடுதான் அமெரிக்கா.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இம்முறை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினூடாக இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கும் அழுத்தங்களைக் கொடுப்பதற்கும் அமெரிக்கா எதிர்பார்த்தது.

இருப்பினும் இறுதிநொடியில் இதில் தலையிட்ட இந்தியா, இலங்கையில் அமெரிக்காவின் தலையீட்டைத் தடுத்து நாட்டுக்கு பேராதரவு வழங்கியது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர். அதை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம்.

ஏனெனில், வடக்கில் அரசு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றதே தவிர, இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தேவையான அரசியல் நடவடிக்கைகளை அது முன்னெடுக்கவில்லை,

வடக்குத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன்படி குறிப்பிட்ட காலத்துக்குள் அந்தத் தேர்தலை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசு மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் போதாது. எனவே தீர்வுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் நாம் அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று தெரிவித்தார் அமைச்சர் திஸ்ஸ விதாரண. (எ-4)

# வட மாகாண சபை இன்...

துள்ள போதும் தம்மால் தேர்தல் வேலைகளை தொடங்கமுடியாதுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடந்த 2006 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்ட பின், கிழக்கு மாகாணசபை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைக்கப்பட்டது. அதன் பின் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தும்படி ஜனாதிபதி பணித்தார்.

இந்த நடைமுறையே வடமாகாணத்திலும் பின்பற்றப்படவேண்டும். ஆனால் எமக்கு இன்னும் கட்டளைகள் கிடைக்க வில்லை என அவர் தெரிவித்தார்.

தேர்தல் செயன்முறைகளை பூர்த்தி செய்ய மூன்று மாதங்கள் தேவைப்படும் தேர்தலை செப்டம்பரில்நடத்துவதாயின் எமக்கு ஜனாதிபதியின் கட்டளை மே மாதத்தில் கிடைக்க வேண்டும் என அவர்குறிப்பிட்டார்.

இதே வேளை, அரசாங்கம் இடம்பெயர்ந்தோரை குடியமர்த்த வேண்டும் என்னும் சாட்டில் வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்தாது இருந்தது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்தது.

வடமாகாண சபை தேர்தல் செப்டெம்பரில் நடைபெறும் என ஜனாதிபதி அறிவித்திருந்தார். அரசாங்கம் வட மாகாண சபை தேர்தலை நடத்த தீர்மானித்திருப்பதை அண்மையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்க அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட தீர்மாணம் வரவேற்றிருந்தது. (எ-4)


# 10-ம் ஆண்டு நினைவஞ்சலி

## துரையப்பா தவராசா

(முகாமையாளர் உரும்பிராய் எரிபொருள் நிரப்பு நிலையம்)

பிறப்பு :- 31.10.1945 இறப்பு :- 31.03.2003

திதி :- சதுர்த்தசி

எளிமையின் சிகரமே அப்பா ! ஏற்றங்கள் நாம்காண
ஏணியாய் நின்ற உத்தமரே ! எங்கள் இதய தெய்வமே !
அன்போடு அரவணைக்கும் அருளமுது - நீங்கள்
எம்மை பிரிந்து பத்தாண்டு ஆனதப்பா !
வாழ்வாங்கு வாழ வழிசமைத்து - நீங்கள்
விண்ணகம் விரைந்து சென்றீர்களே !
தாங்க முடியவில்லை அப்பா தரணிக்கு
வந்து எம்மை தேற்றிடுவீர்



சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை

(2252)


# இலங்கை...

போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்த விடயம் தொடர்பில் தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (எ-11)


## முக்கிய அறிவித்தல்

# V.S.P நல்லெண்ணெய்

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில், V.S.P என்று போலியான லேபில்களை பயன்படுத்தி நல்லெண்ணையாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.Pஐ இலகுவாக இனம்கண்டுகொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ், 26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன், உரிமையாளர் பொ. பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:பொ.பாஸ்கரன்
0212229165,
0212224135.

(சி-2798)


# பயங்கரவாத தடை...

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இருவர்மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நியாயமற்ற முறையில் நிருபிக்கப்படாததினால் இருவரையும் யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (எ-4)

# சுற்றுலா பயணிகள்...

பட்டுள்ளது.

இந்த தூபி அமைந்துள்ள இடம் பாட்னாவிற்கு வட கிழக்கே சுமார் 110 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது.

உள்ளூர் சுற்றுலா விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களை அடுத்த சுற்றுலா தளமான வாரணாசிக்கு அழைத்து செல்லப்படும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவித்தன. (எ-4)


# வேலைவாய்ப்பு

## டோகா /கட்டார்

✔ மாதாந்த சம்பளம் , 45000+ மேலதிக நேரம்
✔ தச்சுத் தொழிலாளர் ✔ வெல்டர்
✔ பிளம்பர் ✔ மேசன் ✔ எலெக்ரீசியன்
✔ டிரைவர் ✔ உதவியாளர் ✔ A/C மெக்கானிக்

**மேலும் பல வாய்ப்புக்கள்**

* உங்களுக்காக 50,000/- கடன் வசதி செய்து தரப்படும்
* ஒரு மாதத்திலேயே விசா ஒழுங்குகள் அனைத்தும் செய்து தரப்படும்.

*In Joint Venture With* iCS Study Overseas

*Supra Foreign Employment Agency*
*No.77, Clock Tower Road,* (பெருமாள் கோயிலுக்கு அருகாமை)
*Jaffna. 021 730 6000*, 0773013060


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org